செப்டம்பர் 2012
SEPTEMBER 2012
6 - 5
VASANTHAM
TAMIL MONTHLY
مجلة الربيع    ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்




மாத இதழ்
The Spring

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!





பேராசிரியர்
M.H.
ஜவாஹிருல்லாஹ்
பேட்டி

ஒப்பில்லா
பாரத மொழிகளின்
உணர்வுமிகு ஒன்றுகூடல்..!



## நர்த்தனமாடும் நயவஞ்சகங்கள்..!
## நசுக்கப்பட வேண்டிய நர்த்தனங்கள்..!!

இலவச வெளியீடு

جمعية النجاة الخيرية

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

# ஆசிரியரை மதியுங்கள்..!
# ஏகஇறைவனை மட்டுமே துதியுங்கள்..!!

"என் இறைவனே..! எனக்கு அதிகமான
ஞானத்தை வழங்குவாயாக!"
-திருக் குர்ஆன் 20:114



செப்டம்பர் 5
ஆசிரியர் தினம்

# இந்த இதழில்..!




செப்டம்பர் 2012
SEPTEMBER 2012
6 - 5
VASANTHAM TAMIL MONTHLY
مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية
வசந்தம்
மாத இதழ்
The Spring
வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

VASANTHAM
TAMIL MONTHLY
AUGUST 2012
ஆகஸ்ட் 2012
மலர் 6 இதழ் 4



CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

GENERAL SUPERVISOR
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

EDITOR
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

EDITORIAL BOARD
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

INITIAL LAY-OUT
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்
مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency

PUBLISHER
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE



CONTACTS தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
Editor's Desk
22447526, 22444117 | Extn: 208
Mob 97848068 -97266683 (Hotline)
FAX: 22400057
Attn: IPC—VASANTHAM
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
ipc.org.kw
vasanthamtamil.com

SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
facebook/vasanthamtamil
www.twitter/vasantham2k
YouTube Scribd.


## நர்த்தனமாடும் நயவஞ்சகங்கள்..! நசுக்கப்பட வேண்டிய நரித்தனங்கள்..!!

முகப்புக் கட்டுரை

மு.அ. அப்துல் முஸவ்விர்-சுவனப்பிரியன்



04

நம்பிக் கழுத்தறுப்பது மட்டுமல்ல நயவஞ்சகம்..!நம்பவே இயலா புறங்களிலிருந்தும் புறப்பட்டு வரக்கூடியது அதன் சாத்தானிய வேகம்..!

## சிறப்புப் பேட்டி

பேரா. M.H. ஜவாஹிருல்லாஹ்

### “““சமுதாயத்துக்கு சிறந்த பங்களிப்பைத் தந்தது...”””


08



தமிழக சட்டமன்றத்தில் முஸ்லிம் சிறுபான்மை பிரதிநிதியான பேராசிரியர். M.H. ஜவாஹிருல்லாஹ் அவர்கள்,குவைத் விஜயத்தின்போது வசந்தம் இதழுக்காக ஆசிரியருக்கு அளித்த பிரத்யேகப் பேட்டி..!

## விருந்தினர் பக்கம்

குஷ்வந்த் சிங்



17

### பாரத விடுதலையின் நாதம்..!

பாரத விடுதலைக்கு அடித்தளமிட்ட முஸ்லிம் மாவீரர்கள்..!

## பாரத விடுதலைதின விழா..!

அப்துல்லாஹ்

### ஒப்பில்லா பாரத மொழிகளின் உணர்வுமிகு ஒன்றுகூடல்..!

11

## கவித்தூறல்கள்

மணியன்

### ஒன்றை இழக்கையிலே..,!

15


02 வாசகர் சுகந்தங்கள்
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!
03 எண்ணச் சிந்தனை
ஆசிரியரிடமிருந்து..!
10 IPC-வழித்தடங்கள்
நிகழ்வுகள்
12 திருக் குர்ஆன்
மனனப்போட்டி முடிவுகள்
13 சிறப்புக் கட்டுரை
மின்னஞ்சல்
14 தொடர்
மு.அ.அப்துல் முஸவ்விர்
16 மழலையர் சோலை
சவுந்தர்யம்
18 வலைகடல்
அபூமதீஹா
19 சுற்றத்து செய்திகள்
அழகிய சிறியவன்
20 அறிவுப் போட்டி-43



بريد الربيع– كلمة العدد – النفاق والمنافقون – الشباب والمجتمع – أنشطة اللجنة – نتيجة مسابقة القرآن – انتبه عن طفلك
– المرأة ضد مهر الرجال – نحو التطور (نشيدة) – صفحة الأطفال – من هو خير الناس؟ –أخبار العالم – مسابقة



# அறிவுச் சிந்தனைக்கு ஆக்கபூர்வ தீனி..!

அழகிய வசந்தம்..! மிகவும் அருமை..!! ஒவ்வொரு இதழும் மெருகு கூடுகின்றது. நிறைய செய்திகள் எம் அறிவுச் சிந்தனைக்கு தீனி போடுகின்றன. தொடர்ந்து வளர இறைவனை இறைஞ்சுகின்றோம்..!

**அப்துந் நாஸர்**

**புதுவை - தமிழகம்**
**மிர்காப் - குவைத்**

ஆசிரியர் அவர்களின் எண்ணச் சிந்தனையில் உதித்த ‘கிள்ளுக்கீரையா முஸ்லிம் உயிர்கள்.?’ அழகிய வடிவம்.விலங்குளளிடம்கூட அன்பு காட்டும் மனிதன் சகமனிதனைக் கொன்று குவிக்கும் அவலம் நெஞ்சை பதற வைக்கின்றது.



**M. ரஹ்மதுல்லாஹ்**
**செங்கை- தமிழகம் ∴**
**பர்வானியா - குவைத்**

முகப்புக் கட்டுரை கண்டேன் பசிக்கு மருந்தாய் வரும் நோன்பு எத்துணை பலாபலன்களை தருகின்றது...? வசந்த ஆக்கங்கள் ஒவ்வொன்றும் பயனுள்ளவை.இறைவன் அருள் புரியட்டும்..!




**அஸ்மா**
**தஞ்சை - தமிழகம்**
**ருமைதியா - குவைத்**

மறைக்கப்பட்ட செய்திகளை வெளிக் கொணரும் நல்ல பணியை வசந்தம் மட்டுந்தான் செய்கின்றது..!தேசியக் கொடி வடிவமைப்பு பற்றிய கட்டுரையைத்தான் சொல்கின்றேன்.மற்ற பத்திரிகைகளுக்கு மத்தியில் வசந்தம்.., ஒரு சுகந்தம்..!



**T. நியாஸ் அஹமத்**
**அபிவிருத்தீஸ்வரம் - தமிழகம்**
**மங்கா∴ப் - குவைத்**

வசந்தம் இதழ் தொடர்ந்து எமக்குக் கிடைக்க இறைவன் அருள் புரியட்டும்.
http://www.facebook.com/aahazack
**ஜக்கரிய்யா விஸ்வக்குடி-தமிழகம் ஹவல்லி-குவைத்**



மனத்தின் ஆணிவேரை தொட்ட அருமையான வரிகளைக் கொண்டிருந்தது வசந்தம். மிக்க நன்றி..!
http://www.facebook.com/thanika.nikaran
**ஹரிஹரன் சென்னை-தமிழகம் குவைத்**




வசந்தம் மிகவும் அருமை..!அறியாதவர்களுக்கும் இதனைக் குறித்து தெரியப்படுத்தச் செய்ய வேண்டும்..,!
http://www.facebook.com/thanika.nikaran
**தணிகநிகரன் ஆரணி-தமிழகம் குவைத்**



இக்கால மனித சிந்தனைக்கு தேவையான வரிகளைத் தருகின்றது வசந்தம்..!பகுத்தறிவை கொண்ட சிந்தனை மனிதன், அதனை,இன்று மிருக குணங்களுடன் ஒப்பிடப்படும் இவ்வேளையில் இவை தேவையான வரிகள்..! காலத்தின் கட்டாயத்திற்க்கும், மனிதப்போர்வையில் நடமாடும் விலங்கினங்களுக்கும், தேவையான சிந்தனைக்கும்..தேவை இவ்வரிகள்...!
www.facebook/Akbar Ali
**அக்பர் அலீ தமிழகம் ஷாமியா-குவைத்**



பேஸ்புக்கில் வசந்தம் பார்த்தேன்.சூப்பர்..!!மிகவும் பயனுள்ள தகவல்கள்.!
http://www.facebook.com/Intihusain
**இன்திஜா ஹுஸைன் மாவனல்லை இலங்கை**



*அன்புள்ள வாசகர்களே! அனைவருடைய பெயர்களையும் இங்கு சேர்க்க பக்கங்கள் போதாததால்.., சிலரை மட்டுமே சேர்த்துள்ளோம்!அடுத்தடுத்த இதழ்களில் தொடருவோம்!தொடர்ந்து வசந்த முகநூல் வாசியுங்கள்!*

*தொடருவோர்..!*

- sharaf.farook
- fazminarazick
- thameemansari.ansari
- zamrath.daliya
- dodge.usman
- ariswana.fathima
- zafar.rahmani
- fathima.ashika
- abdulhameed1971
- Intihusain

*இன்னும் பலர்..!*

*தொடருவோர்..!*

Amitabh Bachan@AmitabhBachan
**கயல்விழி**@vimalashriOneindia
mohamed aashik @news1stsms
Kiran Manral. @kiranmanral



**அன்பு வாசகர்களே.., படைப்பாளர்களே..! உங்கள் படைப்புக்களை அனுப்பும்போது குறைந்தபட்சம், மின்னஞ்சல் முகவரி,செல்லிடைப்பேசி எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிடுங்கள்..!**

# எங்கள் உயிருக்கும் மேலானவரே..!

அண்ட சராசரமும் ஆடிப் போய்விட்டது..!நூற்றாண்டுகள் கடந்தும், தாங்கள் பார்த்தே இராத ஒரு மனிதர் மீது நூறுகளில் எண்ண இயலாத அளவுக்கு ஒரு மாாாாாாாாாபெரும் கூட்டம் கொண்ட அன்பைக் கண்டு அசந்துபோய்விட்டது..!ஏகஇறைக்கு மட்டுமே தலைவணங்கும் கூட்டம், ஆதிக்க சக்திகளின் ஆட்டத்துக்கு அடங்கிப் போகாமல், சாத்வீக வழியில் சங்கமித்து சங்கு முழங்கிய சிரமேற்தனத்தைக் கண்டு சிண்டு பிய்த்துக்கொண்டு நின்றது..!

ஏன் இப்படி..?

ஆம்..!பதிநூற்றாண்டுக்காலம் கடந்தும், வாழையடி வாழையாக மட்டுமல்ல, ஒவ்வொரு வினாடிப் பெ-ாழுதும், புதியவர்களையும் வையகம் முழுதும் ஈர்த்து நிற்கும் தானைத் தலைவனை,தாங்கள் உயிரினும் மேலாக மதிக்கும் தங்கள் இணையில்லா நாயகனை, நேற்று முளைத்த அசிங்கப் பிடாரிகள் பதிநான்கு நிமிட லுழர வுரடிந வலையில் அவதூறுகளுக்கு இலக்காக்கி நிறுத்தியதை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்..?

அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது புனையப்படும் எல்லா வகையான அவதூறுகளும் பழிச் சொற்களும் சிலுவைப் போர்கள் நடைபெற்று வந்த நூற்றாண்டுகள் முதற்கொண்டே, புனையப்பட்டு பரப்பப்பட்டு வந்தன. ஆனால் மதசகிப்புத் தன்மை, கருத்துச் சுதந்தரம் ஆகியவற்றைத் தனது தனித்தன்மையாகக் கொண்ட நவீன யுகம் பிறந்தது. அத்துடன் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வையும் பண்புகளையும் விவரிப்பதில் மேலைநாட்டு அறிஞர்களின் அணுகுமுறை பெருமளவிற்கு மாறிவிட்டிருக்கின்றது..

ஒருபுறம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தனித்துவ ஆளுமைப் போக்கில் அமைந்த அவர்தம் சாதனைகளுக்காக, அண்ணலாரைப் போற்றிப் புகழும் மேற்கத்திய அறிஞர்கள் இருக்கின்றனர்.( ஆனால் அவர்களும், தான் இறைவனின் தூதர் என்று அண்ணலாரின் நிரூபண ரீதியான வாதம் - அழைப்பை நிராகரித்திருக்கவே செய்திருக்கின்றார்கள்)

மறுபுறம், கண்மூடித்தனமாக அன்னாரை வரிந்துகட்டிக் கொண்டு எதிர்க்கும் போக்கைக் கையாளும் நபர்களும் இருக்கின்றனர், அந்த எதிர்ப்பு,அவருடைய இறைததூதுத்துவ தளத்திலும் சரி, தனியாளுமை தளத்திலும் சரி அனைத்திலும் இன்றும் நீடிக்கின்றது.

அறிவுஞானங்களின் தார்மீகக் கலப்பு, ஆவேசஉணர்வு கலவா ஆய்வு நோக்கு, ஆழிய சிந்தனைத்தாகம் ஆகியவற்றை மேற்குலகம் பெற்றிருந்தும் முஹம்மத் (ஸல்) அவர்களின் உன்னத இறைத்தூதுத்துவ மதிப்பை சரியான.., உண்மையான தடத்தில் வைத்து புரிந்துகொள்ளாத அற்பர்களை இன்றைய நவீனயுகத்திலும் அது இன்னும் பெற்றிருக்கின்றது என்பதனையே, இந்த திரைப்பட சம்பவம் கோடி காட்டுகின்றது.கழுதை எவ்வளவுதான் பொதி சுமந்து நமக்கு உதவிகரமாக இருந்தாலும், அதற்கு தெரியுமா கற்பூரவாசனை..?

அண்ணலார் (ஸல்) அவர்கள் நிச்சயம் மிக உயர்ந்த ஒழுக்கப் பண்புகளும் வசீகரமான பழக்கவழக்கங்களும் உயர்ந்த பண்பாடும் கொண்டவர்களாகவே திகழ்ந்தார்கள். ஓர் அரசியல் வித்தகராகவோ, போதகராகவோ, பேச்சாளராகவோ எவரும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் இயற்பியலுக்கு அப்பாற்பட்ட (ஆன்மீக இறையியல்) விஷயங்களைக் குறித்தோ, ஒழுக்கவியல், சட்டம், அரசியல் , பொருளாதாரம் அல்லது சமூகவியல் போன்ற துறைகளைக் குறித்தோ, அவற்றின் அடிப்படைக் கொள்கைகள் குறித்தோ விவாதித்துக் கொண்டிருந்ததை எவருமே கண்டதில்லை, அவருடைய நாற்பதாவது வயது வரை..!

ஆனால், மலைக்குகையிலிருந்து அவர் வெளிவந்தபோது 23 ஆண்டுகளில் இந்த உலகத்தையே மாற்றும் வகையிலான ஒரு செய்தியைக் கொண்டு வந்தார்கள்..!அந்த செய்தியை, நமது அரசியல்வாதிகளைப்போல் அல்லது துறவிகளைப்போல் ஊருக்காக உபதேசித்துவிட்டு, தன்பாட்டுக்கு அவர் செல்லவில்லை..!மாறாக, முதலில் அதனை.., தான் பின்பற்றிக் காட்டினார்கள்..!

அண்ணலார் (ஸல்) அவர்களின் இந்த ஆளுமையை அலசிப் பார்க்கும்., ஆய்வு ரீதியான., நேர்மையான முயற்சி எதனையும், இத்தகைய அசிங்க மேதாவிகள் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இம்மாதிரியான நிலைமைகள் தோன்றும்போதெல்லாம்,அந்தந்த காலகட்ட இறைநம்பிக்கையாளர்கள் பொங்கியெழுவது போன்று, நவீனகால முஸலிம்களும் தங்கள் கோப-தாபங்களை ஒரே அணியில் நின்று வெளிப்படுத்துகின்றார்கள். புகழனைத்தும், ஏகஇறைவனுக்கே! ஆம்..!இந்த வேளையிலாவது அல்லாஹ்வின் கயிற்றைப் பலமாக பிடிக்க நம்மால் முடிந்திருக்கின்றது. (இதுவே அனைத்து அம்சங்களில் நடந்தால் எத்துணை நல்லதாக அமையும்..?)! இந்த ஒற்றுமை,உணர்வுப் பாங்கு.., இத்யாதி.., இத்யாதி.., அனைத்தும் சரிதான்.,!

ஆனால்..,

இம்மாதிரி சமயங்களில், முஸ்லிம்கள் வெளிப்படுத்தும் உணர்வுப் பிரவாகங்களின் போது, சில விரும்பத்தகாத சம்பவங்களும் நடைபெற்றுவிடுகின்றன. ஆனால், அதற்கான வழிமுறைகளை உருவாக்குவதும்,அதனை தவிர்க்க இயலாத போக்காக சப்பை கட்டுவதும் சரியல்ல..!

சம்பந்தப்பட்ட அவதூறு சாதனத்தைத் தடை செய்து நீக்காமல், தனிமனித கருத்துச் சுதந்தரம் என்று ஆதிக்க சக்திகள் வாத-டுவது எத்துணை அகங்காரத்தனமோ.. கண்டனத்துக்குரியதோ,

ஆசிரியரிடமிருந்து..! ..... தொடர்ச்சி ௯-ஆம் பக்கம்..!

இவர்தான் முஹம்மத்..!

உங்களில் யார் நம்பிக்கையாளர்களாய் விளங்குகின்றார்களோ அவர்களுக்கு முற்றிலும் அருட்கொடையாயும் இருக்கின்றார். ஆனால், எவர்கள் அல்லாஹ்வின் தூதருக்கு நோவினை தருகின்றார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது. -திருக் குர்ஆன் 9:61

# நர்த்தனமாடும் நயவஞ்சகங்கள்..!
# நசுக்கப்பட வேண்டிய நரித்தனங்கள்..!!

**நம்பிக் கழுத்தறுப்பது மட்டுமல்ல நயவஞ்சகம்..!நம்பவே இயலா புறங்களிலிருந்தும் புறப்பட்டு வரக்கூடியது அதன் சாத்தானிய வேகம்..! சாய்த்து வைக்கப்பட்ட மரக்கட்டைகளைப் போன்றது அதன் உதாரணம்..! சிரித்துப்பேசி சிண்டு முடித்துவிடுவது அதன் சிறுமைத்தனம்..!இன்றைய உலகம் அசுரத்தனமாக அதன்பால் சாய்ந்து வருவது சோகமான துக்கம்..! அதற்கு உலகம் சாவுமணி அடிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்..!!**



ரோமானிய சாம்ராஜ்யத்தில் பேரரசர் ஜூலியஸ் சீஸரின் உடன்பிறவா தோழன் புருடஸ்..!விஷம் தோய்ந்த கத்தியால் சீஸரை அவனது எதிரிகள் குத்தியபோது,இறுதியாக அவன் புரூட்டஸ்வசம் வந்தபோது,அவனும் குத்தியவேளை, அவனைப் பார்த்தவாறு, அதிர்ச்சியில் சீஸர் கூறுவான் "யு டு புரூட்டஸ்..?" (நீயுமா, புரூட்டஸ்?)..!

அந்த வசனம்.., நயவஞ்சகத்தனத்துக்கு உதாரணம் கூறும் மந்திரமாக இன்றும் கவிஞர்கள்,எழுத்தாளர்கள் மத்தியில் பிரபல்யம்..!

நவீனகாலங்களிலும் இத்தகைய புரூட்டஸ்கள் நண்பர்கள் வடிவில் மட்டுமல்ல, குடும்பங்களில்.., உறவுகளில்.., சகஊழியர்களில்..,சமூகங்களில்..,ஆள்வேரில்..,ஆளப்படுவோரில்.., என்று ஒவ்வொரு தளத்திலும் பரந்து விரிந்து நிற்கின்றார்கள்..! என்ன ஒரே வேறுபாடு.., காலமாற்றத்துக்கு ஏற்றவாறு இந்த நயவஞ்சகக் காளான்கள் தங்கள் அணுகுமுறையை மாற்றி வருகின்றார்கள்.. அல்லது பயன்படுத்தி வருகின்றார்கள்..!

நயவஞ்சகம்..!அதற்கு என்ன வரையறை..? இரட்டைவேட அம்சங்களை முன்னிறுத்தி உள்ளொன்றும் புறமொன்றுமாய் குணாதிசயங்களை மாறுபட்ட நிலைகளில் எதிர்பார்த்திராத வேளைகளில்,எதிர்பாராத விதத்தில்,எதிர்பாராத இடங்களிலிருந்து வெளிப்படுத்தும் 'ஆளுமை" இது..!

இந்த நயவஞ்சகத்தனம், மூன்று விதங்களில்...தளங்களில் செய்றபடும்.

ஓன்று:தனிப்பட்டது.மற்றொன்று:குழுரீதியானது, இன்னொன்று:சமூக ரீதியானது..!

தனிக்குணாதிசய நயவஞ்சக அம்சம் ஒரு வஞ்சகம்.., அந்த மனிதனையும்.., பின்னர் அவன் சார்ந்த குடும்பத்தையும்.., அவனோடு இணைந்த ஒவ்வொன்றையும் பாதித்துவிடும்..!

இன்று நேற்றல்ல..! மனித குலம் தோன்றிய நாள் முதல் சாத்தானின் அடிச்சுவடாய் இந்த நயவஞ்சகம் தலைவிரித்தாடி வந்திருக்கின்றது. நயவஞ்சகர்களின் பண்புகளாய் விளிக்கும்போது ஏகஇறைவன் தன் இறுதிவேதத்தில் அவர்களை சாடியிருப்பதுடன், திருக் குர்ஆனில் அப்பெயரில் ஒரு அத்தியாயம் ஒன்றையே இறக்கிவிட்டான்..!

பொதுவாக அரபிமொழியில் அதன் உண்மை வரையறையை குறித்து வல்லுநர்கள் வரையறுக்கும்போது, நிஃபாக் எனும் அரபுப் பதத்திற்கு மொழிக்கருத்தை சொல்ல முனைந்த இமாம் இப்னு ரஜப் அவர்கள் (ஏமாற்றுதல் மற்றும் சதிசெய்தல் மேலும் நன்மைகளை வெளிக்காட்டி நன்மைக்கு எதிரானதை மறைத்தல்) என்றார். (ஜாமிஉல் உலூம் 375)

எனவே நிஃபாக் என்ற நயவஞ்சகத்திற்கு இவ்வாறு வரைவிலக்கணம் வழங்கலாம் (நம்பிக்கையை (ஈமான்) நாவின் மூலமாக வெளிப்படுத்துதல், நிராகரிப்பை (குஃப்ர்) உள்ளத்தில் மறைத்தல்) (நல்ரத்துன் நஈம் 11:5604 - 5605)

இறைநம்பிக்கை என்றும் வலுவாக நிலைப்பது வெற்றிக்கான அச்சாரம்..! நிராகரிப்பு என்பது வெளிப்படையாக தெரியக்கூடிய பெரும்பாவம்! ஆனால், இந்த நயவஞ்சகம் மட்டுமே நம்பிக்கையை வெளிப்படுத்திவிட்டு,நிராகரிப்பில் வீழ்ந்திருக்கும் கொடிய அம்சம்.அதனால் அதன் பாதகங்களும் கொடுமையானவையாகவே, மறைமுகமானதாகவே இருக்கும்..!

அதுவும், இந்த நயவஞ்சகர்களின் கொடுந்தாக்கம் எத்துணை ஆபத்தானது என்பதை ஏகஇறைவனைவிட வேறு யார்தான் கோடி காட்ட முடியும்..?

திருக் குர்ஆனின் இரண்டாம் அத்தியாயத்தின் ஆரம்பம் மனிதர்களை வகைப்படுத்திப் பேசும்போது முதல் 15- வசனங்களில் இறைநம்பிக்கையாளர்கள் குறித்தும்,6,7 வசனங்கள் இறைநிராகரிப்பாளர்களைக் குறித்தும் பேசும் ஏகஇறைவன்,நயவஞ்சகர்களைக் மனிதனின் ஆளுமையையே கேள்விக்குறியாக்கி விடுகின்றது..!தனிமனிதன் ஒருவனில், இந்த நயவஞ்சகம் குடிகொள்வதற்கான காரணம் எவ்வாறு கண்டறிவது..?

முதலில் தான் நயவஞ்சகனா.. என்பதை அறிய கண்ணாடி முன்னால் நின்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்..! உங்களைப் பார்க்க உங்களுக்கே வெட்கமாக இருக்கும் வகையிலான செயல்களை நீங்கள் அன்றைய தினம் செய்திருந்தால், உங்களுக்கு நீங்களே வஞ்சகம் இழைத்துக் கொள்கின்றீர்கள் என பொருள்..!இந்த தனிமனித

குறித்து மட்டும் 8 முதல் 20-ஆவது வசனம் வரை மிக விலாவரியாக உவமானங்களுடன் வெளிச்சம் போட்டுக் காண்பிக்கின்றான்.

இதிலிருந்து நயவஞ்சகர்களான முனா.ஃபிக்குகள் எந்த அளவு ஆபத்தானவர்கள் என்பதை உணர முடியும்..!

நயவஞ்சகனின் முக்கிய பண்பாக இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் குறிப்பிடும்போது அவன் பேசினால் பொய்யே பேசுவான், வாக்குறுதி அளித்தால் மீறுவான் என்றார்கள்.இன்று பாருங்கள்!வீட்டிலிருந்து ஆரம்பித்து,பணியிடங்களில்,வெளியிடங்களில் என்று அனைத்துவிடங்களிலும் இந்த கொடும்பண்பும் இதனுடன் இணைந்த இரட்டைவேட போக்கும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது.

வயிற்றில் இருக்கும் குழந்தை வெளியில் வந்துவிடுவதுபோல் சிலாகித்துப் பேசுவதும்,வெளியில் சிரித்துப் பேசுவதும், உள்ளுக்குள் வன்மம் வளர்ப்பதும் இன்று சர்வசாதாரணமாகி நிற்கின்றன. தனக்குரிய விஷயங்களில் பிறரைப் பயன்படுத்திக்




கொள்வதும்,நிறைவேறிய பின்னர் குறைந்தபட்சம் அமைதி காக்காது, இன்னபிற இலாபங்களுக்காக தான் பயன்படுத்திக் கொண்டவரையே கருவியாக்கிப் பயன்படுத்தி காலை வாருவதும் சர்வ சாதாரணமாகிவிட்டிருக்கின்றன.ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்கும்போது, அதுபற்றிய பதிலைத் தந்தால் தனது சுயநலத்துக்கு பாதிப்பு ஏற்படுமோ என்று பயந்து,அதற்கு மாற்றமான தொடர்பில்லாத பதிலைத் தருவார்கள். உதாரணத்துக்கு ஒரு சில மனிதர்களிடம் அவர்களுடைய மொழியை அறிந்துகொள்ள"நீங்கள் இன்ன மொழியா..?"

## ஆசிரியரிடமிருந்து..! ..... தொடர்ச்சி..!

அதேபோல்,அவர்களின் தவறுகளுக்காக அவர்தம் குடிமக்களைக் கொல்வதும், அவர்களின் அலுவலகங்களைத் தாக்குவதும்..!

கண்டனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்,ஆக்கபூர்வ வகையில் ஆர்ப்பாட்டங்கள் அரங்கேற வேண்டும்..!இதில் இருகருத்துக்களுக்கு இடமில்லை..!அந்த ஆர்ப்பாட்டங்கள் சரியான பாதையில்,இறைநம்பிக்கையாளர்களின் பண்புநலன்களை பாதித்துவிடாத வகையில் அமைய வேண்டும்.

சமூகவலைதளங்களில் கண்டனங்கள் நாகரிகமாக பதிவுசெய்யப்பட வேண்டும். தரங்கெட்ட வசனங்களை கையாண்டு மகிழ்வது இறைநம்பிக்கையாளர்களுக்கு அழகல்ல..!ஏனெனில், கடுஞ்சொல்கூறாத காவிய நாயகனின் படைவீரர்கள் நாம்..!

முஸ்லிம் நாடுகள் என்ன செய்தன..? ஏது செய்தன..?? என்று வசைபாடிக் கொண்டிருப்பதை விட்டு,நாம் ஒவ்வொருவரும் ஆக்கபூர்வமாக என்ன செய்தோம் என்பதை கேட்டுக் கொள்ள வேண்டும்..??

தொலைநோக்குப் பார்வையுடன் இத்தகைய சம்பவங்கள் இனி நடைபெறாத வகையில் முஸ்லிம் சமுதாயம் செயற்பட வேண்டும்.

என்ன செய்யலாம்..?

சர்வதேச அளவில் இதுபோன்ற சம்பவங்களுக்கு எதிராக வழக்கு தொடுத்து வாதிட்டு வெல்ல,திறமை வாய்ந்த வழக்குரைஞர் குழாம் அமைக்க வேண்டும். ஸவூதி அறிஞர் வாய்மொழிபோல், இத்தகைய சம்பவங்களுக்கு சாவுமணி அடிக்கும் வகையில் குற்றவாளிகளுக்கு கடுந்தண்டனை பெற்றுத் தரும் சட்டம் சர்வதேச அளவில் இயற்றப்பட வேண்டும்.

அசிங்கங்கள் அரங்கேற்றும் லுமுர வுரடிந-களுக்குப் பதிலாக ஒழுக்கநெறி போதிக்கும் ஒரு ஆரளடைஅ வுரடிந எம்மிடம் உள்ளதா..?ஆபாச முகங்களையும் இணைத்துக் காட்டும் குயஉநடிழழம பகரமாக ஒரு அழகிய பயன்பாடுகள் தரும் ஆரளடைஅ குயஉநடிழழம எம்மிடம் வலம் வருகின்றதா..?

எனவே, வருங்கால சமூகத்தை உண்மையான இறைநெறியின்பால் ஈர்க்கவும்,முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆளுமையை அனைவரும் சரியான வகையில் புரிந்துகொள்ளும் வகையில் எம் பணி சிறக்க வேண்டும்.அதற்காக அனைத்து சாதனங்களையும் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள இறைநம்பிக்கையாளர்கள் இணைந்து சீற வேண்டும்..!

எடுத்தோம்-கவிழ்த்தோம் பாணியில் வெறும் கூட்டத்தைக் கூட்டி கலைந்து சென்றுவிடாமல், சிந்தனைரீதியாக, தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வேண்டும்.அதற்கான முயற்சிகளில் திண்ணமாக, இறையருள் அதற்கு துணைநிற்கும் என நம்புவோம்..!


மு.அ.அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்

musawir@alnajat.com.kw | musavir2010@yahoo.com | maam2k@gmail.com
http://www.facebook.com/vasanthammonthly | https://twitter.com/Vasantham2k
ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்


**இவர்தான் முஹம்மத்..!**

(நபியே!) ..நீர் கடுகடுப்பானவராகவும் வன்னெஞ்சராகவும் இருந்திருந்தால், இவர்களெல்லோரும் உம்மை விட்டு விலகிப் போயிருப்பார்கள். ஆகவே இவர்(களின் தவறு)களைப் பொறுத்துக் கொள்வீராக! மேலும் இவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக! -திருக் குர்ஆன் 3:159



# வார்த்தைகளில் வடிக்க இயலா,பக்கங்கள்-நேரங்கள் போதா.., இன்னபிற வழிகளிலும் இந்த நயவஞ்சகத்தனம் பல நவீன வழிகளில் தாண்டவமாடுகின்றது.

என்று கேட்டுப் பாருங்கள்! "இல்லை நாங்கள் முஸ்லிம்கள் -இந்துக்கள்-கிறித்துவர்கள்..!"என்று சம்பந்தமில்லாத பதிலைத் தருவார்கள்.இருவர் உரையாடிக் கொண்டிருக்கும்போது, அந்த மொழி தெரிந்த மூன்றாமவர் வந்துவிட்டால்,சட்டென அவருக்குத் தெரியாத மொழியில் உரையாடுவதும் இன்று எவ்வளவு சாதாரணமாகிவிட்டது..?

இதுபோல் வார்த்தைகளில் வடிக்க இயலா,பக்கங்கள்-நேரங்கள் போதா.., இன்னபிற வழிகளிலும் இந்த நயவஞ்சகத்தனம் பல நவீன வழிகளில் தாண்டவமாடுகின்றது.

தனிமனித அம்சங்களில் மட்டுமல்லாது, இந்தப் போக்கு உறவுமுறைகளிலும் காலை வாருவதிலிருந்து ஆரம்பித்து, பணியிடங்களில் மேலதிகாரத்தின் மகிழ்ச்சிக்காக ஒருமுகமாகவும் மற்ற நேரங்களில் வேறுமுகமாகவும் இருப்பது கொண்டு,ஆட்சிக்கட்டிலில் அமரும் அரசியலார்,ஆட்கொள்ள நினைக்கும் ஆதிக்க சக்தி அரசுகள் வரை நீடிக்கின்றது.

இன்றும்கூட இந்த பண்பு காலநேர வசதிகளையொட்டி வழிமுறையில் மாறுபட்டிருககின்றதே தவிர தன் பண்பில் மாறாமல் இருக்கின்றது.குறிப்பாக, தகவல் தொடர்பு சாதனங்கள்கூட இன்று நயவஞ்சகத்துக்கு பயன்பாடானதாகி வருகின்றன.

எனவே ஒவ்வொருவரும் குறிப்பாக இறைநம்பிக்கையாளர்களான, முஸ்லிம்கள் நயவஞ்சகத்தின் அடையாளங்கள் தன்னில் ஏற்பட்டு விடாமல் காத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும்.

அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் காலத்தில் பெரும் சவாலாக இருந்தது இந்த நயவஞ்சகர்கள்தாம். அன்னாருடைய காலத்துக்கு முன்பிருந்த நயவஞ்சகர்கள், அவர்களிடத்தில் அனுப்பப்பட்ட இறைத்தூதர்களை கொலை செய்யவும் தயங்கவில்லை. உலக இன்பத்தின் மீதிருந்த போதை அவர்களுக்கு பாவம் செய்வதற்கு பல வழிகளை திறந்து விட்டது.

> **தீமைகளை மற்றவர்களுக்கு ஏவுவர், நன்மையான செயல்ங்களுக்கு தடையாக இருப்பர்,**

நயவஞ்சகர்களின் தோற்றம் முதற்கொண்டு அவர்களைக் குறித்து எச்சரிக்கும் இறைவன் திருக் குர்ஆனின் 63-ஆவது அத்தியாயமான முனாஃபிகூன்-இல் இவ்வாறு கூறுகின்றான்:

**நீர் இவர்களைப் பார்த்தால் இவர்களின் உடலமைப்பு உமக்குக் கம்பீரமாகத் தெரியும். இவர்கள் பேச ஆரம்பித்தால் நீர் இவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டே இருந்துவிடுவீர். ஆனால், உண்மையில் இவர்கள், சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் மரக்கட்டைகளைப் போன்றவர்கள். இவர்கள் ஒவ்வோர் உரத்த ஓசையையும் தங்களுக்கு எதிரானதாய்க் கருதுகின்றனர். இவர்கள்தாம் கடும் பகைவர்களாவர். இவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இரும். அல்லாஹ் இவர்களை நாசமாக்கட்டும்! இவர்கள் எங்கே திசைமாறிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்? 63:4**

இறைவனின் இந்த வாக்கு வெறுமனே.., அந்தக் கால நயவஞ்சகர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக நினைக்க வேண்டாம்.மாறாக, இன்றும்கூட அவர்கள் தொடர்கின்றார்கள்.., வெவ்வேறு தளங்களில்., வெவ்வேறு வடிவங்களில்..!அணுகுமுறைதான் மாறியிருக்கின்றதே தவிர.., கோட்பாட்டுத்தனங்கள் மாறிடவில்லை..!

இத்தகைய மனிதர்கள் சுவர்களில் சாய்த்து வைக்கப்பட்ட மரக்கட்டைகளாவர் என இறைவன் கூறுவதிலும் பொருள் உள்ளது.

இந்த உதாரணத்தை முன்னிறுத்தி விளக்கம் அளிக்கும் திருக் குர்ஆன் விரிவுரையாளரும், நவீனகால இஸ்லாமிய சிந்தனையாளருமான மவுலானா மௌதூதி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்:

சுவர்களில் சாய்ந்து அமர்கின்ற இவர்கள் மனிதர்கள் அல்லர்.மாறாக,இவர்கள் மரக்ட்டைகளாவர். அவர்களை மரக்கட்டைகளுடன் ஒப்பிட்டு இவர்கள் மனிதத் தன்மைக்கு உரமூட்டக்கூடிய ஒழுக்கப் பண்பாடுகளின் உயிரோட்டத்தை இழந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.பின்னர் அவர்களைச் சுவர்களில் சாய்த்து வைக்கப்பட்ட மரக்கட்டளைகளுடன் ஒப்பிட்டு, "இவர்கள் சிறிதும் பயனற்றவர்கள். ஏனெனில், மரக்கட்டைகள்கூட அது ஒரு முகட்டிலோ கதவிலோ வீட்டுத் தளவாடங்களிலோ இணைந்து உபயோகப்பட்டிருக்கும்போதுதான் பயனளிககின்றன. கட்டைகளின் வடிவில் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் மரங்கள் எந்தப் பயனும் அளிப்பதில்லை..!" (ஆதாரம்:தஃப்ஹீமுல் குர்ஆன்)

வெவ்வேறு முக வேஷங்களைக் கொண்டு காலம் நகர்த்தும் இவர்களின் யதார்த்த ஆளுமையை

*வெளிக்கொணரும் முகமாக இவ்வாறு பேசுகின்றது திருக் குர்ஆன்:*

இத்தகையோரின் உவமானம் (பின்வரும்) உதாரணத்தைப்போல் இருக்கிறது: ஒருவர் தீயை மூட்டினார் அது அவரைச் சுற்றிலும் ஒளி வீசியபோது அல்லாஹ் அவர்களின் ஒளியைப் பறித்து விட்டான். மேலும் எதையுமே அவர்கள் காணமுடியாத நிலையில் அவர்களை இருள்களில் விட்டு விட்டான். 2:17

*இறைநம்பிக்கையாளர்களிடம் முஸ்லிம்களாகவும் இஸ்லாத்தின் விரோதிகளிடம் நண்பனாகவும் இருந்து (மலாங்கு) வேலை பார்ப்பர்.*

இன்னும் இறைநம்பிக்கை கொண்டிருப்போரை அவர்கள் சந்தித்தால், 'நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்'எனக் கூறுகின்றனர். மேலும் தங்கள் ஷைத்தான்களுடன் அவர்கள் தனிமையில் இருக்கும்போது, நிச்சயமாக நாங்கள் உங்களுடன்தான் இருக்கிறோம்! உண்மையில் நாங்கள் அவர்களைப் பரிகாசம்தான் செய்து கொண்டிருக்கிறோம்" எனச் சொல்கின்றனர். 2:14

*இமாம் அப்துர் ரஹ்மான் அஸ்ஸஅதி அவர்கள் தமது விரிவுரையிலே "அவர்களது நல்லறங்கள் பாழாகிவிட்டன. அந்நல்லறங்கள் ஈருலகிலும் அவர்களுக்கு பயனளிக்க மாட்டாது. நபியவர்களது காலத்தில் வாழ்ந்த முனாஃபிக்குகளை விளித்து, நீங்களும் அவர்களைப் போன்றவர்கள் தான் உங்களது இறுதி முடிவும் மிகவும் மோசமானதாக இருக்கும்" என்கின்றார். (தப்ஸீருல் கரீமுர்ரஹ்மான் 3262-)*

**இறைவனின் இந்த வாக்கு வெறுமனே.., அந்தக் கால நயவஞ்சகர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக நினைக்க வேண்டாம்.மாறாக, இன்றும்கூட அவர்கள் தொடர்கின்றார்கள்..,**

*அவர்களது குழப்பங்கள் பூமியிலே பல வடிவங்களில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். அதனை பல மனிதர்கள் உணரவே மாட்டார்கள் என பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.*

இன்னும் பூமியில் குழப்பம் விளைவிக்காதீர்!" என அவர்களிடம் சொல்லப்பட்டால், நிச்சயமாக நாங்கள் சீர்திருத்தம் செய்பவர்களே!" என அவர்கள் கூறுகிறார்கள். எச்சரிக்கை! நிச்சயமாக அவர்கள்தாம் குழப்பவாதிகளாவர். ஆயினும் (இதனை) அவர்கள் உணர்வதில்லை. இன்னும் மற்ற மனிதர்கள் ஈமான் நம்பிக்கை கொண்டது போல் நீங்களும் நம்பிக்கை கொள்ளுங்கள்!" என அவர்களிடம் சொல்லப்பட்டால் மூடர்கள் நம்பிக்கை கொண்டது போல் நாங்களும் நம்பிக்கை கொள்வதா?" என்றே அவர்கள் பதில் சொல்கிறார்கள் எச்சரிக்கை! நிச்சயமாக இவர்கள்தாம் மூடர்களாவர். ஆயினும் (இதனை) அவர்கள் அறிவதில்லை! 2: 12 - 13

*அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, அவர்களது யதார்த்தத்தை வெளிக்கொணரும் முகமாக,திருக் குர்ஆனில் வேறு எங்கும் கூறாத மிக சிறந்த,எச்சரிக்கைத்தனமான உதாரணத்தை நயவஞ்சகர்களுக்கு கூறி அவர்களை இழிவுபடுத்துகின்றான்.*

இத்தகையோருக்கு ஓர் உதாரணம்: நெருப்பை மூட்டிய ஒருவனின் உதாரணத்தைப் போன்றது. அ(ந் நெருப்பான) து அவனைச் சுற்றிலும் ஒளி வீசியபோது அல்லாஹ் அவர்களுடைய ஒளியைப் பறித்து விட்டான், இன்னும் பார்க்க முடியாத காரிருளில் அவர்களை விட்டு விட்டான். 2:17

*ஒன்றை ஏற்று பின் அதனை நிராகரிக்கும் அதாவது இறைநம்பிக்கை கொண்டு பின்னர் நிராகரித்தவர்களைப் பற்றி வர்ணிக்கும் போது,*

(நபியே!) இந்த நயவஞ்சகர்கள் உம்மிடம் வருகின்றபோது கூறுகின்றனர்: திண்ணமாக நீர் அல்லாஹ்வின் தூதராவீர் என நாங்கள் சாட்சியம் அளிக்கின்றோம்." திண்ணமாக நீர் அவனுடைய தூதர்தாம் என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆனால், இந்த நயவஞ்சகர்கள் நிச்சயம் பொய்யர்கள் என்பதற்கு அல்லாஹ் சாட்சியம் அளிக்கின்றான். இவர்கள் தங்களுடைய 'சத்தியங்களை'க் கேடயமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விதமாக அல்லாஹ்வின் வழியிலிருந்து தாங்களும் விலகி, பிறமக்களையும் அதில் (செல்லவிடாமல்) தடுக்கின்றார்கள். இவர்கள் செய்து கொண்டிருப்பவை எத்துணை மோசமான செயல்! (பார்க்க 63:1,2)

*மார்க்க ரீதியாக நயவஞ்கர்களின் பண்புகளை இவ்வாறு சுருக்கமாக விளக்கலாம்:*

*அவர்கள்,திருக் குர்ஆனையும், நபிவழியையும் பின்பற்றும் கூட்டத்தில் தாமும் இருப்பதாக புளங்காகிதம் கொள்வார்கள். இந்த முக்கியமான பண்பை இன்று பல தரப்பட்ட இயக்கங்கள் தமதாக்கிக் கொண்டு வெறுமனே பீற்றிக்கொண்டு அதேவேளை இஸ்லாத்தின் எதிரிகளோடு கூட்டாளிகளாகவும் இருந்து கொண்டு உண்மையாளர்களை எதிர்க்கவும் செய்கின்றனர். (*பார்க்க *4: 140- 141)*

*இத்தகையவர்கள் தங்களை செவிமடுப்பவர்களைக் கவரும் பாணியிலே தமது பேச்சை அமைத்துக் கொள்வர். இன்றும் இவ்வாறான பேச்சாளர்களை அதிகமாகவே காணமுடிகின்றது. உண்மையைச் சொல்ல வேண்டும் என்பதை மறந்து தமது ஆளுமையை பாதுகாத்துக் கொள்ள எத்தனிக்கும் முஸ்லிம்களை அதிகமாகவே காணமுடிகின்றது.2:204*

*அவர்களது முன்னோர்களைப் போன்றே பூமியில் குழப்பம் விளைவிக்க சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அதனைப் பயன்படுத்திக் கொள்வதுடன் மற்றவர்களையும் குழப்பம் செய்ய ஏவுவர். (*பார்க்க *2:205)*

*தீமைகளை மற்றவர்களுக்கு ஏவுவர், நன்மையான செயல்ங்களுக்கு தடையாக இருப்பர், அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பதில் உலோபித்தனமும் செய்வர். (*பார்க்க *10:67)*

*முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட இறைசெய்தியின் அடிப்படையில் தீர்ப்பளித்தால் விரண்டோடுவர். அல்லாஹ்வின் வேதத்தில், நபியவர்களது வாழ்வில் உள்ள சட்டங்களை அமல்படுத்தினால் அதனையும் கண்டு கொள்ளமாட்டார்கள். (*பார்க்க *4:61)*

*உடல் அமைப்பு, பேச்சு போன்றவற்றை அழகாக்கிக் கொள்வர். இவர்களின் உள்ளமோ மிகவும் மோசமானதாக இருக்கும். (*பார்க்க *63:4)*

*இஸ்லாத்தை அதன் தூய வடிவில் பின்பற்றுவோருக்கு ஏதாவது நன்மை நடந்துவிட்டால் கவலைப்படும் அதே வேளை ஏதாவது தோல்வி அல்லது கொடுமை ஏற்பட்டால் மகிழ்ச்சி கொள்வர். பிறருடைய வெற்றியில் பொறாமையும்,துன்பத்தில் மகிழ்ச்சியும் கொள்ளும் நவீன புருட்டஸ்களை இன்றும் காண்கின்றோம். (*பார்க்க *10:50,51)*

*இறைவழிகாட்டுதலை மிகவும் கடினமானதொரு அமசமாக எண்ணி வெறுக்கும் இத்தகைய நயவஞ்சகம் ஒழியச் செய்வோம்.அதற்கு இறையருள் துணைநிற்கட்டும்..!*

**இவர்தான் முனாஃபிக்..!**

(நபியே!) இவர்கள் இந்த அறிவுரையின் மீது நம்பிக்கை கொள்ளவில்லையானால், இவர்களின் பின்னே கவலைப்பட்டு உமது உயிரை மாய்த்துக்கொள்வீர் போல் இருக்கிறதே!-திருக் குர்ஆன் 5:15

# சமுதாயத்துக்கு சிறந்த பங்களிப்பைத் தந்துவை மாணவர் இயக்கங்கள்..!

**மாணவப் பருவம் முதலே இயக்கவாதியாக இருந்து, ஐ.நா. மன்றத்தில் பாரதத்தின் சிறுபான்மை பிரதிநிதியாக வாதங்களை எடுத்து வைத்து., இன்று தமிழக சட்டமன்றத்தில் முஸ்லிம் சிறுபான்மை பிரதிநிதியாக இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பேராசிரியர். ஆ.ர். ஜவாஹிருல்லாஹ் அவர்கள், அண்மையில் குவைத் விஜயம் புரிந்தார்.அவ்வேளை, வசந்தம் இதழுக்காக ஆசிரியருக்கு அவர் அளித்த பிரத்யேகப் பேட்டி..!**

● சிறுபான்மை இன உறுப்பினராக, தமிழக சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு வாழ்த்துக்கள்! தங்களைப் பற்றிய அறிமுகம்..!

*தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி எனது சொந்த ஊர்.உயர்நிலைப் படிப்பை சென்னை,பிராட்வே தூய மேரி பள்ளியிலும்,பட்டப்படிப்பை சென்னை புதுக்கல்லூரியிலும்,நிர்வாக மேலாண்டை பட்ட மேற்படிப்பை சென்னைப் பல்கலைக்கழகத்திலும் முடித்தேன்.மாணவப் பருவத்திலேயிருந்து மாணவர் இஸ்லாமிய இயக்த்துடன் என்னை இணைத்துக் கொண்டு அதன் தமிழகத் தலைவராக,பின்னர் மத்திய ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டேன். 1985 முதல் வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் துணைப் பேராசிரியராக பணியாற்ற ஆரம்பித்து,அத்துடன் பல்கலைக்கழக மான்யக் குழு நிதி உதவியுடன் “இணையதளத்தில் விளம்பரங்களின் தாக்கம்” எனும் பொருளில் 1998-இல் எம்.ஃபில் பட்டம் பெற்றேன்.பின்னர் அவ்வாறே நிதிஉதவியுடன் அதே சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பி.ஹெச்.டி. பெற்றேன். அதற்கான என் தலைப்பு “இஸ்லாமிய வங்கியில் சேவை தரமும் வாடிக்கையாளர் திருப்தியும்” குறிப்பாக மலேஷிய இஸ்லாமிய வங்கியில்..! பின்னர் 1995-இல் தமிழநாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் எனும் இயக்கத்தை ஆரம்பித்து,அதன் அரசியல் பிரிவாக மனிதநேய மக்கள் கட்சி எனும் அரசியல் கட்சியை மிகச் சமீப ஆண்டுகளில் தொடங்கி இப்போது அதன் சட்டமன்ற பிரதிநிதியாக இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றேன்.*

● முதலில் இயக்கவாதியாக ஆரம்பித்த நிலையிலிருந்தும் தற்போது உலகாயதவாத சிந்தனைகள் பெருகிவிட்ட இன்றைய நிலையில் முஸ்லிம்கள், குறிப்பாக தமிழக முஸ்லிம்கள் நிலை குறித்து என்ன கருதுகின்றீர்கள்..?

*பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையைவிட இப்போது தமிழக முஸ்லிம்களின் நிலை சற்று ஆக்கபூர்வமாக மாறியிருக்கின்றது என்றுதான் சொல்ல*



**இப்போது நான் என்ன நினைக்கின்றேன் என்றால் இன்றைய தலைமுறை யினரை மார்க்க மற்றும் சமூகரீதியாக பண்படுத்துவது மிக அடிப்படை அவசியமாக இருக்கின்றது.**

*வேண்டும்.இளமைக்காலங்களில் இஸ்லாமிய இயக்கத்தில் இணைந்து*



பணியாற்றியதன் காரணமாக, மாணவர் இயக்கங்கள் சிறந்த பங்களிப்பை சமுதாயத்துக்குத் தந்திருக்கின்றன என்று சொல்கின்றேன். பல தளங்களில் உதாரணமாக கல்வி,அரசியல், சமூகம் ஏன் ஊடகத் துறையில் உங்களைப் போன்றவர்களையாகட்டும் எத்தனையோ பேரை இஸ்லாமிய இயக்கங்கள் தந்திருக்கின்றன. இதற்கெல்லாம் அடிப்படை என்று சொன்னால்,அது இஸ்லாமிய அமைப்புக்கள்,இயக்கங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் அதுபோன்ற ஒரு நிலையிலே தற்போதைய காலகட்டத்திலே மாணவர் இயக்கங்கள் செயல்படுகின்றனவா என்பது ஒரு ஐயக்குறி..!ஏனென்றால் இன்றைய இளைய தலைமுறையினர்தாம் நாளைய சமுதாயத் தலைவர்களாக,அவர்களை வழிநடத்தக்கூடியவர்களாக இருக்கப் போகின்றார்கள்.இப்போது நான் என்ன நினைக்கின்றேன் என்றால் இன்றைய தலைமுறையினரை மார்க்க மற்றும் சமூகரீதியாக பண்படுத்துவது மிக அடிப்படை அவசியமாக இருக்கின்றது. மேலும், இளைஞர்கள் மத்தியில் மார்க்கரீதியான பற்று,சமூகத்தில் இருக்கின்றது இது ஒருபுறம்.தமிழகத்தைப் பொறுத்தவரை இதுவிஷயத்தில் ஏராளமான செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.உதாரணமாக சொன்னால்,சென்னையில் தகவல் தொழில்நுட்ப துறைகளில் இருக்கும் இளைஞர்கள் ILUM அகாடமி என்றொரு அமைப்பை நிறுவி மக்கள் மத்தியில் அழைப்புப்பணியை எடுத்துச் செல்லும் பணிகளை செவ்வனே ஆற்றி வருகின்றனர்.

**இறைநம்பிக்கையாளன் என்பவன் ஒரு தேனீயைப் போன்றவன். அது மலருக்கு மலர் தாவி அதிலுள்ள சுவையான, சாற்றை மட்டுமே உறிஞ்செடுக்கும்.அதனை தேனாக மனிதருக்கு வழங்கும்.தேனீயின் இந்த செயலால்,**

இப்படியான ஆக்கபூர்வ செயல்பாடுகள் இருந்தாலும்கூட,தகவல் தொழில்நுட்ப ஊடகங்கள் பொதுவாக அனைத்து சமூகங்களையும் பாதித்திருந்தாலும்,இன்றைய முஸ்லிம் சமூகத்தின் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. அதாவது ஒன்று தொலைக்காட்சி.இன்னொன்று இணையதளம்.அதில் குறிப்பாக ஃபேஸ்புக் போன்ற சமூகவலைதளங்கள்.அதனை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தினால் நிச்சயமாக மிகப்பெரும் சாதனைகளை செய்ய முடியும். ஆனால், பெரும்பாலும் இவை குழப்பங்கள் ஏற்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன என்பது வருத்தத்துக்குரிய விஷயம்.இன்னொன்று!தொலைக்காட்சி மற்றும் இணையதள ஊடகங்களால் சமூகக் கட்டமைப்பு ஒரு பெரும் சீரழிவுக்கு சென்றுகொண்டிருக்கின்றது என்பதும் ஒரு யதார்த்தமான ஒரு நிலை..!

● இதனை எவ்வாறு பார்க்கலாம்?

உதாரணத்துக்கு நாமெல்லாம் சிறுவர்களாக இருந்தபோது, எங்கள் கிராமங்களில்.., ஏன் பொதுவாக எல்லா ஊர்களிலும், காலையில் ஸுப்ஹு தொழுதுவிட்டு திரும்பும்போது,வீட்டுக்கு முன்பாக தண்ணீர் தெளித்து, சுத்தம் செய்வது ஒருபுறம் நடக்க,முஸ்லிம் வீடுகளிலிருந்து திருக் குர்ஆன் ஓதும் சப்தமும்,சிறுவர்-சிறுமியருக்கு திருக் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கும் சப்தமும் கேட்டுக் கொண்டே இருக்கும்.அதேபோல் மக்ரிபு வேளைகளிலும்..!ஆனால் இன்று என்ன நிலைமை..?

அடுத்த இதழில் தொடரும் இறைநாடின்..!

இவர்தான் றஹ்மத்..!

(பாருங்கள்!) உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்காளாவது அவருக்குக் கடினமாக இருக்கிறது. மேலும், உங்களுடைய வெற்றியில் பேராவல் கொண்டவராகவும், நம்பிக்கையாளர்கள் மீது அதிகப் பரிவும், கருணையும் உடையோராகவும் இருக்கின்றார் - திருக் குர்ஆன் 9:128

## மங்கஃப் கிளையில்..!



## ஜஹ்ரா கிளையில்..!



# 11-ஆவது திருக் குர்ஆன் போட்டி...!
# மகளிர் தலைமை கிளை - ரவ்தா-வில்..!







IPC- சார்பாக மகளிருக்கான 11-ஆவது திருக் குர்ஆன் போட்டி, மகளிர் தலைமை கிளை, ரவ்தாவில் நடைபெற்றது. சிறுமியர், புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய சகோதரிகள் மற்றும் அரபியரல்லாத முஸ்லிம் மகளிர் உள்ளிட்ட ஏறக்குறைய 250-க்கும் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்தியாவிலிருந்து தமிழ் உள்ளிட்ட பல்வேறு இந்திய மொழிகளையும் மற்றும் பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம் சார்ந்தவர்கள் அதில் அடங்குவர். "அவர்கள் இறைவனை சார்ந்திருப்பவர்கள், இறைவனிடம் சிறப்பு பெற்றவர்கள்" எனும் சுலோகத்துடன் இந்த போட்டி நான்கு நாட்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (போட்டி முடிவுகள் 12-ஆம் பக்கம்..!)



# பாரத விடுதலை தின விழா..!



IPC- தலைமை நிலையம் சார்பாக 66-ஆவது பாரத விடுதலை தின விழா மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்,தெலுகு,மலையாளம்,ஹிந்தி,கன்னடம்,பஞ்சாபி உள்ளிட்ட இந்திய மொழிசார் பிரிவினர் அனைவரும் ஓரணியில் நின்று கொண்டாடிய இந்த நிகழ்ச்சிக்கு IPC தலைமைநிலைய அழைப்புப் பணி பிரிவுத் தலைவர், அஷ்ஷேக் முஸாத் அல்-எனஸி அவர்கள் தலைமை வகுத்தார். தமிழ்ப் பிரிவு பொறுப்பாளரும்,வசந்தம் ஆசிரியருமான மு.அ.அப்துல் முஸவ்விர் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினார். ஹிந்தி பிரிவு பொறுப்பாளரும் மிஸ்பாஹ் உர்தூ பத்திரிகை ஆசிரியருமான சகோ. ஸஃபாத் ஆலம் அறிமுக உரையாற்ற,சகோ. முஹம்மத் ஸாஜித் "ஸாரே ஜஹான் ஸே அச்சா" பாடலை உச்சஸ்தாயிஇல் பாடி கைதட்டல்களை அள்ளினார். காணொளிக் காட்சி மூலம் வினாடி-வினா போட்டி நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழ் உள்ளிட்ட அனைத்து இந்திய மொழி சார்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத சகோதரர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

(நபியே!) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்.
-திருக்குர்ஆன் 21:107

இவர்தான் முஹம்மத்...!

# திருக்குர்ஆன் மனனப்போட்டி முடிவுகள் 2012

ஒவ்வொரு பிரிவிலும் முதல் வரி பெயர் ஆண் வெற்றியாளர்களையும்
இரண்டாவது வரி பெயர் பெண் வெற்றியாளர்களையும் குறிக்கும்!

## இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களிலும் தமிழ்மொழி சார்ந்த முஸ்லிம்களிலும் உள்ள 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கானது!

| பிரிவு | முதல் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 1 | தாஹா முஹம்மத் ஆலம்கீர்<br>தீனா முஹம்மத் | அப்துல் வஹாப்<br>அ:ஃபீ:பா ஸாலிம் | அப்துல் பாஸித்<br>புஷ்ரா அபுல் காஸிம் |
| 2 | ஸாலிம் மேரோல்<br>ஈமான் பாரேல் | அப்துல்லாஹ் :ஃபைஸ்<br>ஜஹ்ரா முஹம்மத் | பிலால் அஹ்மத்<br>ஜைனப் நாஸிர் |
| 3 | அப்துல் அஜீஸ் ஹாரீஸ்<br>ஸமீஹா | உமர் அஷ்ர:ஃப்<br>ஆதிலா இப்ராஹீம் | ஸையித் முஹம்மத்<br>ஸுமய்யா |

## இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களுக்கானது!

| பிரிவு | முதல் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 1 | உமர் :ஃபாரூக்(மணிகண்டன்)<br>ஓ:ஃபேலியா | :ஃபேதி மாலேகார்<br>அனுராமா இந்திராஸேலி | ஸீமான்ஜேரி<br>- |
| 2 | :ஃபேதி மாலேகார்<br>மாரேதேஸ் பாஜா | ராமேல் ஜார்ஸியா<br>பிரியான்ஷா | பாதம் ஸிங்<br>பிரேமாவதி |
| 3 | ஸ்ரீராமுலு போகால்<br>மாரிஸா | எட்வின் பாலபால்<br>மீராஸோல் | ஹேர்மா ராமானாலியா<br>மார்யா தெரேஸா |
| 4 | :ஃப்ரீதீ கேஸ்தலோ<br>அலேஷியா | எட்வின் அய்:ஃப்<br>அலேகேந்திரா | கார்லேதோ<br>காரேன் :ஃப்ளூரீஸ் |

## அரபியரல்லாத முஸ்லிம்களுக்கானது!

| பிரிவு | முதல் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 1 | முஹம்மத் :ஃபாரூக்<br>ஸாய்மா அப்துர் ரவூ:ஃப் | அஸதுர் ரஹ்மான்<br>:ஃபவ்ஸியா ஆதில் | ஷஹாபுத்தீன்<br>- |
| 2 | முஈனுல் இஸ்லாம்<br>ஜக்கியா ஆதில் | ஹா:ஃபிஸ் மவுலானா<br>ஸல்வா ஸாலேஹ் | ஹ:ஃபீஸ் அலாவுத்தீன்<br>ஹமீதா பேகம் |
| 3 | காலித் ஹா:ஃபிஸ்<br>நாதியா ஆதில் | ஸவ்பான் அஷ்ர:ஃப்<br>நாதியா ஜாஹிர் | :ஃபஹத் அமஜத் அலீ<br>ஹுமைரா முஹம்மத் |
| 4 | முனீருல் இஸ்லாம்<br>ஸுமய்யா முஹம்மத் | உஸ்மான் ஹா:ஃபிஸ்<br>ஸ:ஃபிய்யா முஹம்மத் | ஷுஐப் பின் உமர்<br>ஸீமா முஹம்மத் |
| 5 | உஸாமா :ஃபைஸ்<br>மின்யாஸ் சர்வர் | அஹ்மத் அப்துல்லாஹ் நதீம்<br>அமீனா உமர் | அப்துர் ரஸாக்<br>ஜுமானா யூஸு:ஃப் |

# அழகுக்கு ஆலாபனையா..??

## மழலைக்கு ஆரோக்கியமா..??



**பிறந்த குழந்தைகளுக்கு அத்தியாவசியமான உணவு அது..! மகளிருக்கு இறைவன் அளித்த இணையில்லா சிறப்பான வரம் அது! வறுமனே இருந்த மார்பில் குழந்தை பிறந்த நொடியில சுரக்க ஆரம்பிக்கும் குழந்தைக்கான உன்னத உணவு அது..!அந்தோ,அழகைக் காரணம் காட்டி இதனை குழந்தைக்கு மறுப்பர் சில மடமைத்தன மாது..!**

உலக அளவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உணவு என்றால் அது தாய்ப்பால்..!இதற்கு இணையான பொருள் எதுவும் உண்டோ.., அப்பால்..!! பிறந்த குழந்தையின் வாழ்நாள்ஆரோக்கியத்துக்கு இது அருமருந்துப்பால்..! பிறந்த குழந்தைகளுக்கு அத்தியாவசியமான உணவு தாய்ப்பால்.

தாய்மையும், தாய்பாலும் மகளிருக்கு இறைவன் அளித்த சிறப்பான வரம். அதனால்தான் வெறுமனே இருந்த மார்பில் குழந்தை பிறந்த நொடியில் தாய்ப்பால் சுரக்கிறது. இதனை உடனடியாக குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

### நீர்மத்தங்கம்

குழந்தை பிறந்த உடன் சுரக்கும் தாய்ப்பால் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதனை நீர்மத்தங்கம் என்று அழைக்கின்றனர். இதில் உயர்தர ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன. குழந்தையின் உடலுக்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளது. எனவேதான் பிறந்த குழந்தைக்கு உடனே இந்த தாய்ப்பாலை கொடுக்கவேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள். தாய்ப்பாலானது குழந்தைக்கு எளிதில் ஜீரணமாகிவிடும். இது தவிர குழந்தைகளுக்கு ஏற்படும் ஆஸ்துமா, ஒவ்வாமை, டைப் 2 நீரிழிவு, உடல்பருமன் போன்ற நோய்கள் எதுவும் ஏற்படாமல் தடுக்கிறது. ஆரோக்கியம் அவசியம்..!

தாய்ப்பால் சுரப்பு தாய்ப்பால் ஊட்டும் பெண்களின் மார்பக அளவுக்கும், தாய்ப்பால் சுரப்புக்கும் சம்பந்தமே இல்லை. சில பெண்களுக்கு மார்பகம் பெரியதாக இருக்கும். ஆனால், தாய்ப்பால் சுரப்பு குறைவாக இருக்கும். இன்னும் சிலருக்கு மார்பகம் சிறியதாக இருக்கும். அதேநேரம், தாய்ப்பால் அதிகமாக சுரக்கும். மார்பகத்தில் உள்ள திசு சுரப்பிகளின் எண்ணிக்கையையும், அவை தூண்டப்படும் விதத்தையும் பொறுத்துதான் ஒரு பெண்ணுக்கு எந்த அளவுக்கு தாய்ப்பால் சுரக்கும் என்பதை தெரிந்துகொள்ள முடியும். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்கிற ஆர்வம்கூட ஒரு பெண்ணின் தாய்ப்பால் சுரப்பு திசுக்களை தூண்டிவிடும் எனும் உண்மை மிக வியப்பானது.சில தாய்மார்களுக்கு குழந்தை பெற்றெடுத்த சில நாட்களிலேயே தாய்ப்பால் சுரப்பு வெகுவாக குறைந்து விடும். இதற்கு காரணம் அவர்கள் சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ளாததும், ஹார்மோன் சுரப்பு குறைபாடும்தான்.

பிறந்த சிசுக்களுக்கு தேவையான கால்சியமும், பாஸ்பரசும் 2 : 1 என்கிற விகிதத்தில் தாய்ப்பாலில் உள்ளது. பச்சிளம் குழந்தைக்குத் தேவையான றாநல புரோட்டீன், தாய்ப்பாலில் மட்டும்தான் உள்ளது. தாய்ப்பாலில் உள்ள மைக்ரோ நியுட்ரிஷியன்ஸ் குழந்தைக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரும்.

### தாய்க்கும் நன்மைகள்.!

பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது குழந்தைக்கு மட்டுமல்ல தாய்க்கும் சிறந்த நன்மைதான். மார்பகப் புற்றுநோய் ஏற்படாது. உயர் ரத்த அழுத்தம் குறைகிறது. அதேபோல் நீரிழிவு நோயும் ஏற்படுவது தடுக்கப்படுகிறது என்கின்றனர் மருத்துவர்கள்..!

நவீன நங்கையரில் பெரும்பாலோர்,தம் அழகுக்குக் குந்தகம் விளைந்துவிடும் எனும் பொய்யான நம்பிக்கையில்,தாய்ப்பால் ஊட்டுவதை தவிர்க்கின்றனர்.

ஆனால், உண்மையில்,தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம் தாய்க்கும் சேய்க்கும் நெருக்கம் அதிகரிக்கிறது. குழந்தையை நெருக்கமாக வைத்திருப்பதன் மூலம் ஆக்ஸிடோசின் சுரக்கிறது. இதனால் தாய்ப்பால் அதிக அளவில் சுரக்கிறது.

தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்களுக்கு டைப் 2 நீரிழிவு, மனஅழுத்தம், மார்பகப்புற்றுநோய், கருப்பை புற்றுநோய் போன்றவை ஏற்படுவதில்லை என்கின்றன ஆய்வு முடிவுகள். எனவே ஆறுமாதம் வரை குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பது தாய்க்கும், சேய்க்கும் ஆரோக்கியத்திற்கு அவசியம் என்கின்றனர் மருத்துவர்கள்..! குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் வரை தாய்க்கு பிரசவகால விடுப்பு அளிக்கப்படுவதும் தாயும் சேயும் இணைந்திருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயேதான்..!

இவர்தான் முஹம்மத்..!

*உண்மை யாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருந்தது உங்களில் அல்லாஹ்வையும் மறுமைநாளையும் நம்புகின்றவராகவும், அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருபவராகவும் இருக்கின்ற ஒவ்வொருவர்க்கும்! -திருக்குர்ஆன் 33:21*

# வழிமுறை காட்டும் வாழ்க்கை நெறி.,!

## வனிதையர் வன்கொடுமைக்கு சாவுமணி..!!



பெண்கல்வி பெண் குழந்தைகளின் இறப்பு சதவிகிதத்தையும், மகப்பேறின்போது பெண்கள் இறக்கும் சதவிகிதத்தையும் குறைத்திருக்கிறது. ஆனால், கருவில் இருக்கும் பெண் குழந்தையைக் கொல்வது சில ஆண்டுகளாக அதிகரித்திருக்கிறது.

தர்மபுரி,பெரம்பலூர்,அரியலூர் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் 0-6 வயதுள்ள ஆண் - பெண் குழந்தைகளின் விகிதம் 1000:892 என மிகமிகக் குறைவாக இருக்கிறது.கடந்த 2007 ஆம் ஆண்டுக் கணக்கின்படி தற்கொலை செய்து கொள்பவர்களில் 1.8 % பேர் 14 வயதுக்கும் கீழே உள்ள சிறுமியர்கள் ஆவர்.(இது சிறுவர்களின் விகிதத்தை விட அதிகமாகும்) 15 முதல் 30 வயது வரையுள்ளவர்களின் விழுக்காடு 25.7 % ஆகும்.இந்த வழக்கம் பெண்மக்கள் மீதான வெறுப்பு மற்றும் கள்ளக்காதல் விளைவுகளால் பெருகி வருகின்றது. திருக் குர்ஆன் கூறுகின்றது:

> வறுமைக்கு அஞ்சி உங்கள் பிள்ளைகளைக் கொலை செய்யாதீர்கள்! நாம்தாம் அவர்களுக்கும் உணவளிக்கிறோம் உங்களுக்கும் உணவளிக்கிறோம். உண்மையில், அவர்களைக் கொலை செய்வது பெரும் பாவமாகும். 17:31

இதேபோன்று,பெண் தற்கொலை அதிகமாகி வருவதற்கான காரணங்களை ஆய்ந்தால்.., நமது நாட்டில் தற்கொலை செய்து கொள்ளும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

**வண்ணமயமான வாழ்விலிருந்து விடுபட்டு வெள்ளைத் துணியில் அடைக்கலம் தேடும் இவர்கள், தங்களின் வாழ்வை விட்டு ஒதுங்குவதற்கான காரணங்கள் என்னென்ன?**



வண்ணமயமான வாழ்விலிருந்து விடுபட்டு வெள்ளைத் துணியில் அடைக்கலம் தேடும் இவர்கள், தங்களின் வாழ்வை விட்டு ஒதுங்குவதற்கான காரணங்கள் என்னென்ன?ஒரு துண்டுக் கயிற்றிலோ,ஒரு துளி விஷத்திலோ இவர்கள் தங்கள் வாழ்வை முடித்துக் கொள்ளும்போது அவற்றுக்கான காரணத்தை நாம் அறியாமால் போவது ஏன்? அந்த மர்ம முடிச்சுதான் என்னவோ?

தற்கொலைகள் நடைபெறுகின்றபோது அதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டிய காவல் துறையினர் ஆரம்பக்கட்ட விசாரணையில் காட்டும் வேகம், பிறகு படிப்படியாகக் குறைந்து அந்த வழக்குகள் தூசு படிந்த கோப்புகளில் உறங்கிக் கிடப்பது ஏன்?

தாய் தந்தையரின் அவசர கோல வாழ்க்கையும் சண்டை சச்சரவுகளும்,குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான கலந்துரையாடல் இன்மை,உணர்ச்சிவசப்பட்டு நடுநிலை தவறுதல்,பருவம் அடைகின்றபோது ஏற்படுகின்ற உளவியல் பிரச்னைகள்,தனிமை எண்ணம்,அன்பு,காதல் ஆகியவை குறித்த தவறான புரிந்துணர்வு,எதையும் சாமளிக்கின்ற திறமை இன்மை,துக்கம்,கவலை போன்ற உளவியல் சார்ந்த காரணிகளும்,மாதவிடாய் ஏற்படுவதற்கு முன்பு ஹார்மோன்களின் காரணமாக உண்டாகும் வேதனை, ஆரோக்கியமின்மை, தீரா நோய்கள்,அழகின்மை போன்ற உடல் சார்ந்த காரணிகளும் பெண்கள் இறுதியாகத் தற்கொலை செய்து கொள்ள ஆதாரமாகிவிடுகின்றன என உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இதனை தடுக்க தீர்வு என்ன..?

அடுத்த இதழில், இறை நாடின்.,!

# ஒன்றை இழக்கையிலே
## ஓராயிரம் நாம் பெறுவோம்..!

கருவறையில் இருக்கையிலே
இருட்டறை தான் என்றாலும்
உணர்ந்தோம் ஒரு பாதுகாப்பை..!
வெளிச்சமும் பிடிக்கவில்லை
வெளியுலகம் வருவதற்கோ
துளியளவும் விருப்பமில்லை.
"உள்ளேயே இருப்பதற்கா
கருவாய் நீ உருவானாய்..?"
என்றே பரிகசித்தே படைத்தவன்
பாரினில் பிறக்க வைத்தான்.

அழுதே நாம் பிறந்தோம் பாதுகாப்பை
இழந்தே நாம் தவித்தோம்.
பிறந்தது இழப்பல்ல..,
பெற்றது ஒரு பேருலகம்
என்றே பிறகுணர்ந்தோம்.
சிரிக்கவும் பழகிக் கொண்டோம்..,
உறவுகளை நாம் பெற்றோம்..!..,
நண்பர்களைக் கண்டெடுத்தோம்..!
தேவைகளைப் பூர்த்தி செய்ய
அனைத்தும் நாம் கற்றும் கொண்டோம்.

ஒன்றை இழக்கையிலே
ஓராயிரம் நாம் பெறுவோம்..!
இழந்ததையே நினைத்திருந்தால்
புதியதையே பெற மறப்போம்..!
எதையும் இழக்கும் பொழுதெல்லாம்
இதை நினைக்கும் மனமிருந்தால்..,
இருக்கையிலே போற்றினாலும்,
இழக்கையிலே மனம் வருந்தோம்..!
இனிப் பெறுவதென்னவென்றே
இன்முகத்துடன் எதிர்பார்ப்போம்..!



அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும் எவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லையோ அத்தகைய நிராகரிப்பாளர்களுக்கு கொழுந்து விட்டெரியும் நெருப்பை நாம் தயார் செய்து வைத்துள்ளோம் -திருக் குர்ஆன் 48:13

இவர்தான் முஹம்மத்..!

யூஸுஃபும் சகோதரர்களும்..! 8

# பலித்தன கனவுகள்..!

எல்மா ரூத் ஹார்டர்
தமிழில் மழலைப்ரியன்

என்ன என்பதைப் போல அவர்கள் ஆவலுடன் யூஸுஃபைப் பார்த்தனர்.

அவர் தொடர்ந்து கூறினார்.

“இறைவனை நம்பாமலும், மறுமையை ஏற்காமலும் வாழ்கின்ற கூட்டத்தின் வழிமுறையை நான் பின்பற்றவில்லை. என் முன்னோர்களான இப்ராஹீம், இஸ்ஹாக் மற்றும் யஃகூப் ஆகியோரின் வழிமுறையைப் பின்பற்றுகின்றேன். நாங்கள் அனைவரும் ஒரே இறைவனையே நம்புகின்றோம். இறைவனுடன் எதனையும் நாங்கள் இணையாக்குவதில்லை.

என்னுடைய சிறைத்தோழர்களே! ஊங்களிடம் ஒன்று கேட்கின்றேன். பலதரப்பட்ட கடவுளர் சிறந்தவரா..? அல்லது எல்லாவற்றையும் அடக்கி ஆளும் ஒரே இறைவன் சிறந்தவனா..? அவனை விடுத்து எவற்றையெல்லாம் நீங்கள் நம்புகின்றீர்களோ.., அவை யாவும் நீங்களும் உங்கள் முன்னோர்களும் சூட்டிக் கொண்ட வெறும் கற்பனைப் பெயர்களே தவிர உண்மையல்ல! இதுதான் முற்றிலும் நேரான வாழ்க்கை நெறியாகும். ஆனாலும், இதை பெரும்பாலோர் அறிவதில்லை”

பிறகு அந்தக் கைதிகளிடம் அவர்களின் கனவின் பொருளைக் கூறினார். “உங்களில் ஒருவர் தம் எஜமானாகிய எகிப்து அரசருக்கு பழரசம் புகட்டுவார். மற்றொருவர் கழுவிலேற்றிக் கொல்லப்படுவார். பறவைகள் அவருடைய தலையைக் கொத்தித் தின்னும்”

இருவரும் விடுதலையாகி, அரசரிடம் பணிபுரியப் போகிறவர் என்று யூஸுஃப் நம்பினாரோ, அவரிடம் “அரசரிடம் என் நிலையைப் பற்றிக் கூறு” என்றார்.

யூஸுஃப் சொன்னபடியே நடந்தது. ஒருவனுக்கு மரணதண்டனை கிடைத்தது. இன்னொருவன் விடுதலையானான். அவன் மீண்டும் அரசரிடம் பணிபுரிய சேர்ந்தான். ஆனால், யூஸுஃபை பற்றி அரசரிடம் சொல்ல மறந்துவிட்டான். இதனால், இன்னும் சிறிது காலம் யூஸுஃப் சிறையில் வாட வேண்டியிருந்தது.

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..!
அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

## திருக் குர்ஆன்

mjjpahak 108
myftJu
kffhtpy mUsggllJ
trdqfs 3

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ①

اِنَّ شَانِئَكَ هُوَ الۡاَبۡتَرُ ④

108:1 இன்னா அ’தைனா கல் கவ்ஸர்

108:1 (நபியே!) நாம் உமக்கு ‘கவ்ஸரை‘ அருளினோம்.

فَصَلِّ لِرَبِّكَ وَانۡحَرۡ ③

108: 2 ஃபஸல்லி லிரப்பி(bbi)க வன்ஹர்

108:2 எனவே, நீர் உம் இறைவனுக்காகவே தொழுவீராக! பலி (குர்பானி) யும் கொடுப்பீராக!

اِنَّاۤ اَعۡطَيۡنٰكَ الۡكَوۡثَرَ ②

108:3 இன்ன ஷா(shaa) னிஅக ஹுவ வல் அப்(b)தர்


108:3 திண்ணமாக உம் பகைவன்தான் வேரறுந்தவன் ஆவான்.

## ஒரு சிறு திருத்தம்..!

கடந்த ஆகஸ்ட் 2012 வசந்தம் இதழில் வெளியான திருக் குர்ஆன் பகுதியில் அரபிமொழி வசனங்களில் அல்-காஃபிரூன் அத்தியாயத்துக்குப் பதிலாக அல்-இக்லாஸ் வசனங்கள் மீண்டும் பிரசுரமாகிவிட்டது. பிழைக்கு வருந்துகின்றோம்..!
(ஆ-ர்)

# பாரத விடுதலையின் நாதம்..!

## அடித்தளமிட்ட முஸ்லிம் சாகசம்..!!



இந்திய விடுதலைப்போர் என்பது ஒரு வீர காவியம். இந்தப் போரில் எண்ணற்றவர்கள் சிறை சென்றனர். இலட்சக்கணக்கானோர் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். இத்தியாக வேள்வியில் ஈடுபட்டவர்களில் முஸ்லிம்களின் பங்கு மகத்தானது.

### அலைகடல் அரிமா குஞ்சாலி மரைக்காயர்

இந்திய விடுதலைப் போரின் முன்னோடிகளாகத் திகழ்பவர் ஒரு முஸ்லிம் தான் என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. கடற்போர் பல செய்த தமிழ் மன்னர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் புகழ்ந்து உரைக்கின்றன. அம்மன்னர்களைப் போன்று கடற்போர் பல செய்தவர் குஞ்சாலி மரைக்காயர். ஆங்கிலேயர் நம் நாட்டை அடிமைப்படுத்துவதற்கு முன் இங்கு வந்து கால்பதித்த போர்ச்சுகீசியரை விரட்டியடிக்க கடற்போர் பல செய்த குஞ்சாலி மரைக்காயர் தான் இந்திய விடுதலைப் போரின் முன்னோடி. கடற்போரில் சாகசங்கள் புரிந்த இந்த வீரத் தளபதியை வெற்றி கொள்ள முடியாத எதிரிகள் நயவஞ்சகமாகக் கொன்றனர்.



**பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் பல போராட்டங்களை அந்த வஹாபி இயக்கம் நடத்தியது.**

### வரி தர மறுத்த வரிப்புலிகள்

இந்தியா 1947ம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. ஆனால், அதற்கு முன்னரே சுதந்திரம் பெற்று விட்டோம் என்று மிகுந்த நம்பிக்கையுடனும், உறுதியுடனும் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்று பாடினார் மகாகவி பாரதியார். அந்த அளவுக்கு அவரது மனதில் நம்பிக்கை விதையை விதைத்தது ஹாஜி ஷரியத்துல்லா 1781ம் ஆண்டு தொடங்கிய பெராஸி இயக்கமும் அதன் பின் தோற்றுவிக்கப்பட்ட வஹாபி இயக்கமும் ஆகும் என்று கூறலாம்.வஹாபி இயக்கம் என்று வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படும் இயக்கத்தை தோற்றுவித்தவர் சையது அஹமது என்பவர் ஆவார்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் பல போராட்டங்களை அந்த வஹாபி இயக்கம் நடத்தியது. வங்கத்தில் வரி கொடா இயக்கம் நடத்தி நாடியா மாவட்டத்தில் 24 பர்கனாக்களைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, இந்திய மக்கள் சுதந்தரக் காற்றை சுவாசிக்க வழிவகுத்தது. சுதந்தரம் அடைந்து விட்டோம் என்று தீர்க்க தரிதனத்துடன் அமரகவி பாரதி பாடியதற்கு இந்த வரலாற்றுப் பிண்ணனிதான் காரணம் என்று ஊகிக்க முடிகிறது.

### கலக்கிய கான் சாஹிபு

ஒரு காலத்தில் ஆங்கிலேயருக்கு வேண்டியவராக இருந்து, பிறகு அவர்களுக்கு எதிராக மாறியவர் கான்சாஹிப்.இவர் யூசுஃப்கான், நெல்லூர் சுபேதார், முஹம்மது யூசுப், கும்மந்தான், கம்மந்தான் சாகிபு என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார். யூசுஃப் கான் சாஹிபு மதுரையில் ஆங்கிலேயரின் கொடியைப் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டுப் பொசுக்கி விட்டு சுதந்தரப்பிரகடனம் செய்தவர். இவர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தபோது சொந்த நாட்டுத் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டார். ஆங்கிலேயர் அவரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

### ஷா அப்துல் அஜீஸ்

இந்தியாவைச் சுதந்தர நாடாகப் பிரகடனம் செய்த இஸ்லாமிய விடுதலை வீரர்களில் ஷா அப்துல் அஸீஸ் அல் தெஹ்லவியும் ஒருவர். பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லிம்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இன்னல்கள் இழைத்து வருவதைக் கண்டு வேதனைப்பட்ட அவர் இந்தியாவை 'தாருல் ஹர்ப்' -யுத்த பூமி-ஆகப் பிரகடனம் செய்தார்.

ஷா வலியுல்லாஹ்வின் மூத்த மகனாக 1746ம் ஆண்டு டெல்லியில் பிறந்த தெஹ்லவி ஆங்கிலேயரை எதிர்க்க முஸ்லிம்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டிருந்தார். அத்திட்டம் நிறைவேறுவதற்கு முன்னரே காலமாகிவிட்டார். இவர் கூறியுள்ள மார்க்கத் தீர்ப்புகள் 'ஃ பத்வா' எனும் பெயருடன் இரண்டு பகுதிகளாக வெளிவந்துள்ளன.

### அஞ்சாத புலி ஹைதர் அலி

18-ஆம் நூற்றாண்டில் சிறந்த தளபதியாகத் திகழ்ந்தவர் ஹைதர் அலி. இவர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து நடத்திய போர் 'முதலாம் மைசூர் போர்' எனப்படுகிறது. ஹைதர் அலியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் ஆங்கிலேயர் தோற்று ஓடினர். ஆனால், இரண்டாம் மைசூர் போரில் ஆங்கிலேயர் சூழ்ச்சி செய்து இவரைத் தோற்கடித்தனர்.

### தீரன் திப்பு சுல்தான்

'மைசூர் புலி' திப்பு சுல்தானின் பெயரைக் கேட்டாலே ஆங்கிலே யரின் உடல்கள் நடுங்கும். இவர் ஹைதர் அலியின் மகனாவார். இரண்டாம் மைசூர் போரில் இவரது பங்கு மகத்தானது. தன் தந்தையின் மறைவிற்குப் பின், ஆங்கிலேயரை எதிர்த்து இவர் போரில் ஈடுபட்டார்.

### வங்கத்துச் சிங்கங்கள்

வங்காளத்தில் 1776ம் ஆண்டு முதல் பத்து ஆண்டுகள் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக முஸ்லிம் பக்கிரிகள் நடத்திய புரட்சியால் பிரிட்டிஷ் ஆட்சி கதிகலங்கி விட்டது. இந்தப் புரட்சிக்குத்தலைமை தாங்கிய சிராக் அலியைப் பிடிக்க ஆங்கிலேயர்கள் எவ்வளவோ முயற்சித்தனர். தலைமறைவான அவரை கடைசி வரை ஆங்கிலேயர்களால் பிடிக்கவே முடியவில்லை.

அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்க்கின்றவர்கள் இழிவுக்கு ளாக்கப்படுவோர்கள் அவர்களுக்கு முன்பிருந்தவர்கள் இழிவுக்கு ஆளாக்கப்பட்டதைப் போன்று!
-திருக் குர்ஆன் 58:5


இவர்தான் முஹம்மத்..!

# facebook வலை தேடுதே..! முகநூல்




www.facebook.com/shafna.nazeer

“பாரினில் பெண்கள் ஆள வந்தோம்..!” என முழங்கும், இலங்கை முஸ்லிம் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் மங்கையர்..! வாழ்த்துக்கள்..!





http://www.facebook.com/manzor007

“தனது வருவாய் வந்தது ஆகுமான வழியிலா அல்லது விலக்கப்பட்ட வழியிலா என்பது குறித்து கூட மனிதன் கவலைப்படாத காலம் வரும்”- முஹம்மத் (ஸல்) அவர்கள்!


http://www.facebook.com/manzor007






http://www.facebook.com/kavitha.anu.96



“ஆக்கபூர்வ அம்சங்களுக்கு அணை போடவில்லை எங்கள் மார்க்கம்.முழங்கும் முஸ்லிம் மகளிர்!” இடுகையிட்ட மாத்தளை சகோதரி கவிதா அனு அவர்களுக்கு நன்றி...!

## அழகிய சேவை..!

http://www.facebook.com/ipc.rawdah




சுவனத்துக்கான உங்கள் பாதைக்கு வழிகோலும் வகுப்புக்கள், குவைத் IPC ரவ்தா கிளையில்..!


## சரியான விளக்கம்..!


www.facebook.com/fazminarazick




பர்தா குறித்த அழகிய விளக்கம், இதுபோன்ற உண்மை விளக்கங்கள் தேவையான தருணம் இது..!

## உண்மை ஒப்புதல்கள்...!


www.facebook.com/Intihusain

இன்றைய காலத்துக்கு ஒப்பான உண்மை வாக்கு..!





http://www.facebook.com/fatima.asna.1


நிம்மதியான வாழ்க்கைக்கு நித்திய வழிமுறையாய் கண்டவர்கள் கொடுத்து வைத்தவர்கள்





http://www.facebook.com/tippusultha

வெளிக் காவியும் உள்காவியும் சேர்ந்து கைகோர்த்து,தங்கள் உண்மை சொரூபத்தை காட்டிக் கொண்டு..!







http://www.facebook.com/Rizwana2k

கண்டதுக்கெல்லாம் தினம் கொண்டாடுவோர் மத்தியில் எங்களுடையது ஆக்கபூர்வ கொண்டாட்டம், ஒருநாளைக்கு மட்டுமல்ல.., ஒவ்வொரு நாளும்.,!

## திருக் குர்ஆன்39:21


www.facebook.com/zinoofa.ansar




இப்போது புரிகின்றதா.., நாங்கள் ஒன்றே என்று..!



# ஸவூதி அரேபிய உயர் தூதரக முதல் மங்கை பிரதிநிதியாக மோதி..!



ஸவூதி அரேபிய உயர் தூதரக பிரதிநிதியாக பதவியேற்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை மோதி அல் கல.்ப் பெற்றுள்ளார். அமெரிக்காவில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் சமூக-கலாச்சாரத்துறை துணை அலுவல் அதிகாரியாக சகோதரி மோதி அல் கல.்ப் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது பதவி நியமனம் குறித்து அமெரிக்காவின் வெர்ஜீனியாவில் உள்ள தனது வீட்டில் இருந்து தொலைபேசி மூலமாக அல் அரேபியா சானலுக்கு அளித்த பேட்டியில், மோதி அல் கல.்ப் மிகுந்த மகிழ்ச்சியை தெரிவித்தார். கல.்பை தவிர 13 சவூதி பெண்கள் அமெரிக்காவில் உள்ள தூதரகத்தில் பணியாற்றுகின்றனர்.

2008-ஆம் ஆண்டு முதல் சவூதி தூதரகத்தில் சமூக-கலாச்சார துறை இயக்குநராக கல.்ப் சேவையாற்றி வருகிறார். ரியாதில் உள்ள பிரின்ஸஸ் நோரா பல்கலைக்கழகத்தில் இருந்து மொழி விஞ்ஞானத்தில் பி.ஹெச்.டி முனைவர் பட்டம் பெற்றுள்ள கல.்ப், சவூதி பெண்களின் உரிமைப் போராட்டத்தில் முன்னணி போராளி ஆவார். 2003-ஆம் ஆண்டு முதல் 2007-ஆம் ஆண்டு வரை அரப் நியூஸ் என்ற ஆங்கில பத்திரிகையில் கட்டுரையாளராக பணியாற்றினார். கடந்த2009-ஆம் ஆண்டு கல்வி துணை அமைச்சராக பதவியேற்ற நோரா அல் .்பாயிஸா என்பவர்தாம் சவூதி அரேபியாவில் உயர் பதவியில் நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார்..!

# மணிப்பூர் முஸ்லிம் மாணவர் சாதனை...!




மத்திய மேல்நிலை கல்வி வாரியம் (சி.பி.எஸ்.இ)-2012 ஆம் ஆண்டிற்கான 12-ஆம் வகுப்பு தேர்வில் இந்தியாவிலேயே முதலிடத்தை மணிப்பூரைச் சார்ந்த முஸ்லிம் மாணவன் முஹம்மத் இஸ்மத் பெற்று சாதனைப் படைத்துள்ளார்.

வடகிழக்கு மாநிலத்தில் இருந்து ஒரு மாணவர் இந்திய அளவிலான சி.பி.எஸ்.இ 12-ஆம் வகுப்பு தேர்வில் முதலிடம் பெறுவது இதுவே முதன் முறையாகும். 500க்கு 495 மதிப்பெண்களை (99.6) பெற்றுள்ளார். இவர் மணிப்பூர் மாநிலம் தவ்பால் மாவட்டத்தில் லிலாங்கில் ஹைரோபி மைஇலிகாய் என்ற ஊரைச் சார்ந்தவர். இவரது தந்தை மவ்லானா .்பஸீயுர் ரஹ்மான், ஆரம்பநிலை மதரஸா ஆசிரியர்,தாயார் இஸ்மத்தின் சிறுவயதிலேயே மரணமடைந்துவிட்டார்.

7 சகோதரிகளை கொண்ட இஸ்மத் குடும்பத்தில் கடைசி நபர். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தபோதும் இஸ்மத் படிப்பில் கெட்டிக்காரர். இன்னொரு ஆச்சரியமான விஷயம் என்ன தெரியுமா?இவர் வசிக்கும் கிராமத்தில் தினமும் 2 அல்லது 3 மணிநேரமே மின்சாரம் இருக்கும். இதனால் அவர் தனது பெரும் பகுதி நேரத்தை பள்ளிக்கூடத்திலேயே கழிப்பார். தினமும் 810- மணிநேரம் படிப்பார். இவரது தந்தை கூறுகையில்,இஸ்மத்தின் பலவீனமான உடல்நிலையும், பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையும் கல்வி கற்க தடைக் கற்களாகும் என தெரிவித்துள்ளார். மேலும் அவர், தனது மகன் இத்தகைய தடைகளை தாண்டி வெற்றியை ஈட்டியுள்ளதற்கு உதவிய அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதாக கூறினார்.

இஸ்மத் தனது வெற்றியின் சூத்திரமாக கூறுவது என்னவெனில், ஒருவர் தனது ஆசையை கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நோக்கி அவரது நடவடிக்கைகள் அமையவேண்டும். ஆடம்பரமாக நவநாகரீகமாக வாழ்வதை விட எளிமையாக வாழ்வதிலும், அதிகமாக சிந்திப்பதிலும் ஒருவர் கவனம் செலுத்தவேண்டும். ஒரு மனிதன் தீர்மானித்து செயல்பட்டால் எல்லாம் சாத்தியமே." என்றார்.!

# பிடிவாதம் இறை கட்டளைக்காக..!



பர்தாவை அகற்றாத காரணத்தால், இலண்டன் கல்லூரியில் நடந்த பெற்றோர் சந்திப்பு கூட்டத்தில் ஒரு பெண்ணுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இலண்டனில் மென்செஸ்டரின், வெலி ரேஞ்ச் பகுதியில் வசிப்பவர் அப்துல், 40. தொழிலதிபர். இவரது மனைவி மருன் ர.்பீக், 40. இவர்களுக்கு உவைஸ் 18, மற்றும் இப்ராகிம்,12, என்ற இரண்டு மகன்கள் உள்ளனர்.

இதே பகுதியில் உள்ள கல்லூரியில் உவைஸ் கல்விகற்று வருகின்றார். இந்த கல்லூரியில் பெற்றோர் சந்திப்பு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டதால் மருன் ர.்பீக், பர்தா அணிந்து வந்தார். இவரை தடுத்த கல்லூரி காவலர்கள், பர்தாவை அகற்றினால் மட்டுமே கல்லூரிக்குள் அனுமதிப்போம் என்று கூறியுள்ளனர்.

கடைசி வரை மருன் ர.்பிக், பர்தாவை அகற்ற மறுத்ததால் அவர் கல்லூரிக்குள் அனுமதிக்கப்படவில்லை.'பிரிட்டனில் பிறந்து வளர்ந்த நான், கல்லூரிக்கு அடிக்கடி வருகிறேன். இருப்பினும், என்னை பர்தாவை அகற்றச்சொல்லி வருத்தமடைய செய்துள்ளனர்' என, மருன் ர.்பீக் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவமானது சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

போட்டிப் படிவம் முகநூலிலும் கிடைக்கும்
facebook/vasanthamtamil

# அறிவுப் போட்டி!

கடந்த (ஆகஸ்ட் 2012) இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா? இனி,பின்வரும் கூற்றுக்கள் மற்றும் கூற்றுக்கு உரியவர்களின் படங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன. கூற்றுக்குரிய எண்களை பொருத்தமானவர்களின் படங்களுக்கு அருகில் உள்ள வெற்றிடத்தில் இடுக..!

மொத்தம் 3 பரிசுகள்

1 கடந்த இதழ் முகப்புக் கட்டுரையுடன் தொடர்புடைய.., இதயத்தை இரணமாக்கும் சம்பவம்.,!



2 அறிவுப் பொருளாதார ஆத்மானந்த விழா..!



3 திருக் குர்ஆன் மனனப்போட்டி!



4 சிறுபிள்ளையாய் நாம் மாறி பலபேரைக் கைக் கோரி இதயங்களில் மனைவி,வீடு வந்து போனாலும்..!



5 தஹ்மினா கோஹிஸ்தானி..!



## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆண்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 10. 2012 10. முடிவுகள் வசந்தம் டிஸம்பர் 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

## சுயவிவரம்

பெயர் Name

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

மின்னஞ்சல் email ID

தேசிய இனம்/நாடு
Nationality

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait

# இஸ்லாமிய நிலையம் - மகளிர் கிளை

## AUTUMN COURSE TIME TABLE

## இலையுதிர்க்கால இனிய வகுப்புக்கள்

### செப்டம்பர் 2012 முதல் ஜனவரி 2013 வரை

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| திருக் குர்ஆன் வகுப்பு..!<br>5.30 -7<br>சகோ.ஜைனப் அல்-அஷ்ரீ<br>ஆங்கிலம்<br>அறை எண் 5 | அரபிமொழி வகுப்பு 1<br>5.00 -7.00<br>சகோ. ஜிஹான்<br>-<br>அறை எண் 5 | அரபிமொழி வகுப்பு 2<br>5.00 -7.00<br>சகோ. அஸ்மா<br>-<br>அறை எண் 2 | அரபிமொழி வகுப்பு 1<br>5.00 -7.00<br>சகோ. ஜிஹான்<br>-<br>அறை எண் 5 | அரபிமொழி வகுப்பு 2<br>6.30 - 8.30<br>சகோ. முர்ஷிதா<br>-<br>அறை எண் 2 | அரபிமொழி வகுப்பு 1<br>8.30 - 10.30<br>சகோ. ஜைனப்<br>-<br>அறை எண் 4 |
| அண்ணலார் (ஸல்) அவர்களின் சடரீதியான அற்புதங்கள்<br>5.30 -7<br>சகோ.ஜைனப் அல்-அஷ்ரீ<br>ஆங்கிலம்<br>அறை எண் 5 | அரபிமொழி வகுப்பு..!<br>5.00 -7.00<br>சகோ. ஹிதாயா<br>-<br>அறை எண் 2 | அரபிமொழி வகுப்பு 3<br>5.00 -7.00<br>சகோ. ஜிஹான் & கேதம்<br>-<br>அறை எண் 2 | பிக்ஹ் - 2<br>5.00 - 6.30<br>சகோ.ரீம்<br>ஆங்கிலம்<br>அறை எண் 2 | | அரபிமொழி வகுப்பு 2<br>8.30 - 10.30<br>சகோ. ஜிஹான்<br>-<br>அறை எண் 2 |
| ஃபிக்ஹ் - 1<br>தூய்மை<br>5.30 -7<br>சகோ.ஆயிஷா<br>ஆங்கிலம்<br>அறை எண் 5 | திருக் குர்ஆன் வகுப்பு..!-அல்-பகரா 3<br>7.00 -8.30<br>சகோ.மர்யம் அல்-ஹர்தான்<br>-<br>அறை எண் 2 | திருக் குர்ஆன் விரிவுரை<br>அந்நூர்<br>7.00 - 8.30<br>சகோ.அதரீ<br>ஆங்கிலம்<br>அறை எண் 2 | திருக் குர்ஆன் வகுப்பு..!<br>அல்-மாய்தா<br>7.00 -8.30<br>சகோ. ஃபாய்கா<br>-<br>அறை எண் 2 | திருக் குர்ஆன் விரிவுரை<br>அந்நூர்<br>5.00 - 6.30<br>சகோ. குப்ரா<br>ஃபிலிப்பீன் மொழி<br>திவானியா | அரபிமொழி வகுப்பு 3<br>8.30 - 10.30<br>சகோ. கேதம்<br>-<br>அறை எண் 1 |
| திருக் குர்ஆன் ஓதுகலை 1<br>5.30 -7<br>சகோ.மர்யம் அல்-ஹர்தான்<br>ஆங்கிலம்<br>அறை எண் 1 | ஃபிக்ஹ் - 4, நோன்பு<br>5.00 - 6.30<br>சகோ.நாதியா இப்லாக்<br>ஆங்கிலம்<br>அறை எண் 1 | திருக் குர்ஆன் வகுப்பு..!<br>7.00 - 8.30<br>ஸனா அல் வஹைபி<br>-<br>அறை எண் 1 | திருக் குர்ஆன் வகுப்பு..!<br>யாஸீன்<br>5.00 - 6.30<br>சகோ. நூரா<br>-<br>அறை எண் 1 | -<br>6.30 - 8.00<br>சகோ.உம்முஸூலைம்<br>ஃபிலிப்பீன் மொழி<br>திவானியா | அரபிமொழி வகுப்பு 4<br>8.30 - 10.30<br>சகோ. அமல்<br>-<br>அறை எண் 5 |
| இறைத்தூதர்கள் வரலாறு 2<br>5.30 -7<br>லதீஃபா ஸையீத்<br>ஆங்கிலம்<br>அறை எண் 2 | இறைநம்பிக்கை<br>5.00 -6.30<br>சகோ. நஸீபா<br>ஃபிலிப்பீன் மொழி<br>திவானியா | இறைநம்பிக்கை<br>5.00 -6.30<br>சகோ. ஃபெரோஸ்<br>ஃபிலிப்பீன் மொழி<br>அறை எண் 7 | திருக் குர்ஆன் வகுப்பு..!<br>பாகம் அம்ம 2<br>6.30 - 8.00<br>சகோ. அர்ஃபியா<br>-<br>அறை எண் 1 | திருக் குர்ஆன் வகுப்பு..!<br>அத். ஷூஅரா<br>5.00 - 6.30<br>சகோ. அர்ஃபியா<br>-<br>அறை எண் 1 | திருக் குர்ஆன் வகுப்பு..!<br>அத்-அல்முஃமினூன்<br>9.00 - 10.30<br>சகோ. குப்ரா<br>-<br>திவானியா |
| நபித்தோழியர் 2<br>5.30 -7<br>சகோ.உம்முஸூலைம்<br>ஃபிலிப்பீன் மொழி<br>அறை எண் 2 | திருக் குர்ஆன் 2<br>6.30 -8.00<br>சகோ. குப்ரா<br>ஃபிலிப்பீன் மொழி<br>தீவானியா | திருக் குர்ஆன் 2<br>6.30 -8.00<br>சகோ.உம்முஸூலைம்<br>ஃபிலிப்பீன் மொழி<br>தீவானியா | ஃபிக்ஹ் - 4, நோன்பு<br>5.00 - 6.30<br>சகோ.ஷர்ஃபுன்னிஸா<br>சிங்களம்<br>அறை எண் 5 | அண்ணலார் (ஸல்) அவர்களின் அருந்துணைவியர்<br>6.30 - 8.00<br>சகோ. ஸினூஃபா<br>தமிழ்<br>அறை எண் 5 | இறைத்தூதர்கள் வரலாறு 3<br>2.30 - 4.00<br>சகோ. குப்ரா<br>ஃபிலிப்பீன் மொழி<br>ஜூனூப் ஸூர்ரா |
| இறைநம்பிக்கை<br>5.00 -6.30<br>-<br>ஃபிலிப்பீன் மொழி<br>அறை எண் 7 | திருக் குர்ஆன் 1<br>5.00 - 6.30<br>சகோ. ரஹ்மா<br>எத்தியோப்பிய மொழி<br>அறை எண் 5 | நபிமொழி 40 - 1<br>5.00 - 6.30<br>சகோ.ஸமீரா அல்அக்வான்த்<br>ஆங்கிலம்<br>அறை எண் 4 | திருக் குர்ஆன் வகுப்பு 1<br>6.30 - 8.00<br>சகோ.ஷர்ஃபுன்னிஸா<br>சிங்களம்<br>அறை எண் 5 | இறைநம்பிக்கை<br>5.00 -6.30<br>-<br>ஃபிலிப்பீன் மொழி<br>அறை எண் 4 | |
| திருக் குர்ஆன் 1<br>6.30 -8.00<br>சகோ.மர்யம் அல்-ஹர்தான்<br>ஃபிலிப்பீன் மொழி<br>தீவானியா | அண்ணலார் (ஸல்) அவர்களின் அழகிய வரலாறு<br>5.30 -7<br>சகோ. ராபியா<br>எத்தியோப்பிய மொழி<br>அறை எண் 5 | திருக் குர்ஆன் ஓதுதலின் அடிப்படைகள்<br>6.00 - 8.00<br>சகோ. நஸீபா<br>ஃபிலிப்பீன் மொழி<br>திவானியா | திருக் குர்ஆன் வகுப்பு 1<br>5.00 -6.30<br>சகோ. ஸினூஃபா<br>சகோ. ஸினூஃபா<br>அறை எண் 8 | திருக் குர்ஆன் ஓதுதலின் அடிப்படைகள்<br>6.30 -8.00<br>சகோ. நூர்<br>ஃபிலிப்பீன் மொழி<br>அறை எண் 4 | |
| இந்த வகுப்புக்கள் ஸால்மியா மற்றும் மங்ஃப் மகளிர் கிளைகளில் மட்டும்..! | | அண்ணலார் (ஸல்) அவர்களின் அழகிய வரலாறு<br>5.00 - 6.30<br>சகோ. நூர்<br>ஃபிலிப்பீன் மொழி | இறைநம்பிக்கை<br>6.30 - 8.00<br>சகோ. ரிஸ்மியா<br>சிங்களம்<br>அறை எண் 7 | | அரபிமொழி வகுப்பு<br>வாசிக்க,எழுத,பேச..!<br>ஒவ்வொரு வெள்ளியன்றும்..! |


IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية
لجنة الدعوة الإلكترونية Electronic Da'wa Committee EDC
IPCWEBTV @IPCKW GROUP/IPCKW
97600074 : الخط الساخن 22444117 اتصل نصل
رحمة للعالمين...
www.ipc.org.kw

| Al-Wafrra | Al-Solibekat | Saad al-abdullah | Al-Kaeraoan | Al-Ishbelea | Al-Omarea | Al-Khaseer | Al-Roudaa | Al-Salmiya | Al-Sabahia | Al-Khaitan | Al-Mangaf | Al-Jahraa | Main Branch |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23810308 | 24870920 | 24531598 | 24667370 | 24384917 | 24718062 | 24562844 | 22511301 | 25733263 | 23620332 | 24711141 | 23723002 | 24558830 | 22444117 |
| 66640206 | 97244497 | 97286888 | 97299962 | 97233356 | 94449856 | 97223301 | 90005517 | 97541315 | 66500590 | 99868285 | 97599699 | 99313514 | 97600074 |

# நாயகம் எங்கள் தாயகம்..!



(நபியே!) நீர் கூறிவிடுவீராக: "உங்கள் தந்தையர், உங்கள் பிள்ளைகள், உங்கள் சகோதரர்கள், உங்கள் மனைவியர், உங்களுடைய உறவினர்கள், நீங்கள் சம்பாதித்த செல்வங்கள் மற்றும் தேக்கநிலை ஏற்பட்டுவிடுமோ என நீங்கள் அஞ்சுகின்ற உங்களுடைய வணிகம் மற்றும் உங்களுக்கு விருப்பமான இல்லங்கள் ஆகியவை அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்விட அவன் வழியில் போராடுவதைவிட உங்களுக்கு நேசமானவையாயிருந்தால், அல்லாஹ் தன்னுடைய தீர்ப்பினை (உங்களிடம்) செயல்படுத்தும் வரை நீங்கள் எதிர்பார்த்திருங்கள்! அல்லாஹ் தீய சமுதாயத்துக்கு நேர்வழி காட்டுவதில்லை."

திருக் குர்ஆன் 9:124

அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்க்கின்றவர்கள் இழிவுக்கு ஆளாக்கப்படுவார்கள் அவர்களுக்கு முன்பிருந்தவர்கள் இழிவுக்கு ஆளாக்கப்பட்டதைப் போன்று! நாம் தெள்ளத் தெளிவான சான்றுகளை இறக்கிவிட்டோம். இனி, நிராகரிப்பவர்களுக்கு இழிவுமிக்க வேதனை இருக்கின்றது. 58:6 அல்லாஹ் அவர்கள் அனைவரையும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பி, அவர்கள் என்னவெல்லாம் செய்துவிட்டு வந்திருக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு அறிவித்துக் கொடுக்கும் நாளில் (இந்த இழிவுமிக்க வேதனை கிட்டும்.) அவர்கள் மறந்து போய்விட்டனர். ஆனால், அல்லாஹ் அவர்களுடைய செயல்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் எண்ணி எண்ணி பாதுகாத்து வைத்திருக்கின்றான். மேலும், அல்லாஹ் ஒவ்வொன்றுக்கும் சாட்சியாகவும் இருக்கின்றான்.

திருக் குர்ஆன் 58:5